1512

தொகுதி 6.] 1927௵ மே௴ 1௳ [பகுதி 4.

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

22 JUN

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களை வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஞு ஜனவரிமீத்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கோலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற எப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. இப்போது கடற் கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி யிருக்கிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ஞு ஜனவரிமீத்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காதாதலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணு சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928ஞு ஜனவரிமீ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும்.

உள் நாட்டிற்கு வருஷ சந்தா	ரூ.	2—8—0
வெளி நாட்டிற்கு	,,	3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	0
பவளத்தீவு 2 பாகமும்	,,	3	0	0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	,,	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
க[illegible]கச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

... ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
THE REGISTRAR OF BOOKS
22 JUN 1927
MADRAS

கடற் கொள்ளைக்காரன்

கடவுள் வணக்கம்.

"ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
வொளியாகி வெளியாகி யுருவு மாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுட னுற்பத்தி நண்ணுதாகி
இன்றாகி நாளையுமாய் மேலு மான
வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே."

1-வது அத்தியாயம்.

ஓமெனும் பொருளின் உட்பொருளானவனும், மனவாக்குக் கெட்டா மாட்சிமை பொருந்தியவனும், மதாதீதனும், சகல மதங்கட்கும் மூலமானவனும், ஆக்கியளித்துத் துடைக்கும் அற்புதனுமாய், எள்ளில் எண்ணெய் போல் அண்டபிண்ட சராசரங்களெங்கணும் நிறைந்து நிற்கும் [illegible] பரம்பொருளாகிய பரமேசுவரன் படைத்த இப்பூவுலகம் பல வகைப்பட்டது. அந்த அற்புதமூர்த்தி இயற்கையில் அமைத்துள்ள பொருள்களின் பல் வகைப்பட்ட அற்புதங்களை அளவிட்டறிய எவராலும் முடியாது. அவற்றின் தன்மையை உணர்வதற்கே எவருக்கும் ஆற்றலில்லை.

சென்னை-600 008
186514

அவற்றுள் நமது கதையிற் சம்பந்தப்பட்ட பூமியைப் பற்றி மட்டும் கொஞ்சம் கூறுகிறோம். நம் நாடாகிய இப்பாரத பூமியிற் பிறந்து இங்கேயே வசிப்பவர்களுக்கு உலகின் மற்ற பாகங்களிலுள்ள நாடுகள் எத்தகையவை யென்பது தெரியாது. எல்லா நாடுகளும் இப்படித்தான் ஏறக்குறைய இருக்கும் என்றே யிவர்கள் எண்ணி யிருப்பார்கள். ஆனால் உண்மை யப்படியில்லை. உலகம் முழுமையும் சீதோஷ்ணஸ்திதி ஒரே மாதிரியாக விருக்கவில்லை. சில பாகங்களில் அதிக உஷ்ணம்; சில பாகங்களில் அதிக சீதளம்; சில விடங்களில் உஷ்ணமும் சீதளமும் சமம். இவ்வாறு சீதோஷ்ண நிலைமை வித்தியாசப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்திற்கும், பூமி சிருஷ்டி காலத்தில் அமைந்த அமைப்பிற்கும் தக்கபடி தேசங்கள் பலவிதமாக விருக்கின்றன. இதனாற்றான் ஓரிடத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் இன்னோரிடத்தில் உற்பத்தியாவதில்லை. நம் நாட்டில் உற்பத்தியாகும் சம்பாநெல், மா, பலா, கமுகு, தென்னை, பனை முதலியவை ஐரோப்பா கண்டத்தில் உற்பத்தியாவதில்லை. அங்கு உற்பத்தியாகும் சில பொருள்கள் இங்கு உற்பத்தியாகா.

நமது கதை நடக்குமிடம் பூமியின் வடபாகத்தில், நம் நாட்டிற்கு நெடுந்தூரம் வடமேற்கில் உள்ளது. நமது கதையில் வரும் பெயர்களனைத்தும் நம் நாட்டார்க்குச் சுலபமாய் மனதில் பதியும் வண்ணம் மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நமது நண்பர்கள் மறவாதிருக்கக் கோருகிறோம். நமது கதை தொடங்குமிடம் ஓர் தீவு. அது வடகடலில் உள்ளபடியால் அங்கு குளிர் மிகவும் அதிகம். பூமியோ கற்பாறைகள் நிறைந்துள்ளது. அங்கு எங்கு பார்த்தாலும் கற்குன்றுகளும், இடை யிடையே உள் நாட்டில் நுழைந்து வரும் கடற்கழிகளும், சில சிற்றாறுகளும், ஆங்

காங்கு புல் முளைக்கத்தக்க துண்டு துண்டுப் பூமிகளுமுண்டு. ஏதேனும் பயிரிடுவோர் மிகக் கஷ்டப்பட்டே அத்தொழில் செய்யவேண்டும். அத்தீவிற்குச் சத்தத்தீவு என்று பெயர்.

அத்தீவின் ஓர் முனை நெடுந்தூரம் கடலிற் செல்கிறது. அதற்குச் சம்புமுனை யென்று பெயர். சுமார் ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்புகூட இப் பிரதேசங்களில் வசித்த மனிதர் நாகரீகமற்ற காட்டு மிராண்டிகளாகவே யிருந்தார்கள். ஏறக்குறைய மேல் நாடு முழுமையுமே அப்போது அத்தகைய நிலைமையில் தான் இருந்தது. அப்போது அவர்களுக்குச் சீவனம் காட்டு மிருகங்களை வேட்டை யாடுவதாலும், கடலில் மீன் பிடிப்பதாலுமே பெரும்பாலும் நடந்து வந்தது. இதனால் அங்கு ஒரு மனிதன் காட்டு மிருகத்தைக் கொல்லவும், படகோட்டவும் தெரியாதவனாக விருந்தால் அவன் மிக்க தாழ்வாகவே கருதப்படுவான்.

அக்காலத்தில், அத்தீவாரைவிட அதற்கும் வடக்கேயுள்ள கண்டத்தைச் சேர்ந்த ஒரு நாட்டு ஜனங்கள் அத்தீவிற்குச் சென்று அங்குள்ள பூமிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த வடதேசத்தில் ஓர் தலைவனாக விருந்த ஒருவன் சத்தத்தீவின் வட முனைக்குச் சொந்தக்காரனாயிருந்தான். அவன் அத்தீவின் வடகோடியிலிருந்த ஜலபுரம் என்ற இடத்தில் ஒரு பெரிய மாளிகையைக் கட்டினான். நமது கதை தொடங்கும் காலத்தில் அம்மாளிகை யிருந்தது. ஆனால் அது காலத்தால் பழுதுபட்டு மூடப்பட்டிருந்தது. வட கடலில் நேரிடும் கொடிய புயற் காற்றினாலும் பனியாலும் அம்மாளிகையின் கதவுகள் சாளரங்கள் யாவும் பிடுங்கி யெறியப்பட்டும் பழுதுபட்டும் போயின. வேகமாயடிக்கும் காற்றால் அம்மாளிகையின்

முன் பாகத்திலுள்ள அறைகளிலெல்லாம் மூன்றடி யுயரத்திற்கு மணல் நிரப்பப்பட்டிருந்தது.

அவ்வாறிருப்பினும் அம்மாளிகையின் ஓர் பாகம் வாசஸ்தலத்திற்கு யோக்கியமானதாகவே யிருந்தது. ஆயினும் அங்கு ஒருவரும் வசிப்பதில்லை. நமது கதை தொடங்கும் காலத்திலிருந்த அதன் சொந்தக்காரர் அத்தீவின் வேறொரு பாகத்தில் வசித்துக்கொண்டிருந்தார். ஜல புரத்திலிருந்த அம்மாளிகையினருகில் துண்டு துண்டாய்க் கொஞ்சம் பயிரிடத்தக்க பூமிகளிருந்தன. அங்கிருந்த ஜனங்கள் அவற்றைப் பண்படுத்தித் தங்களால் விளைவிக்கத்தக்க தானியம், காய்கறி, பழவர்க்கங்களைப் பயிரிட்டுக்கொண்டு சொந்தக்காரருக்குக் கப்பம் செலுத்தி வந்தார்கள்.

அப்போதிருந்த அப்பூமியின் சொந்தக்காரர் மிக்க யோக்கியமானவர். அவர்தம் பூமிகளைப் போய்ப் பார்வையிடுவதேயில்லை. ஆனால் அவர் கொஞ்சம் முன் கோபமுடையவர். ஆயினும் குடிகளிடம் உதார குணமும், இரக்கமும் உடையவர். இவரும் அந்த வடதேசத் தலைவர்களின் சந்ததியில் வந்தவர். அங்கு குடியேறி யுள்ளவர்களில் பெரும்பாலார் அந்நாட்டாரானதால் அவர்களெல்லாம் இவரிடம் மரியாதையும் வாஞ்சையும் வைத்திருந்தார்கள். அவர் பெயர் தைரியநாதன். அங்கிருந்த பூமிகளை யனுபவித்துக்கொண்டு முன்னிருந்த குடும்பத்தார்களெல்லாம் அவருக்கு அன்னிய நாட்டார்கள். அவர்கள்மேல் இச் சொந்தக்காரருக்கு அவ்வளவாகப் பற்றில்லை. முதலில் ஜலபுரத்தில் மாளிகையைக் கட்டிய அம்மூல புருஷருடைய சந்ததியே நாம் என்று தைரியநாதன் என்பவர் கருதுவதால் அன்னிய நாட்டாரைத் தாழ்வாகவே கருதலானார். அங்குள்ள குடிகள் அனேக விஷயங்களில் தங்கள்

முதலாளி மிக்க கருணையுடையவரென்றும் நல்லவரென்றும் அறிந்திருந்தார்கள். அவர்மேல் அவர்களுக்கு அன்பே. அதோடு அவர் தூரமான ஓரிடத்தி லிருந்துகொண்டு தங்கள் வசத்திலிருக்கும் பூமியை வந்து பார்க்காதிருந்ததால் அவர்களுக்கு அது மிக்க அனுகூலமாக விருந்தது.

இவ்வாறிருக்கையில் மார்க்கசேனன் என்னும் ஒருவன் அந்த ஜலபுரம் மாளிகையில் குடியிருக்க வந்தான். அந்த ஆள் நமது கதை தொடங்கச் சிலவருடங்களிருக்கையில் முதல் முதல் அங்கு வந்து சேர்ந்தான். அத்தீவிலுள்ளோர் அதிதிகளை யன்போடேற்று உபசரிக்கும் குணமுடையவர்கள். மார்க்கசேனன் என்ற அம்மனிதன் முதல் முதல் தைரியநாதம் பிள்ளையின் வீட்டிற்குவந்தபோது அவன் அவரால் மிக்க அன்போடு வரவேற்று உபசரிக்கப் பட்டான்.

ஆனால் அவன் யார் என்பது ஒருவர்க்கும் தெரியாது. அவன் எந்த ஊரிலிருந்து வந்தான்? எந்த வமிசத்தான்? ஏன் தன் நாட்டை விட்டுவிந்தான்? இங்கு என்ன செய்ய வந்தான்? ஏன் இங்கு இவ்வளவு காலம் தங்கியிருக்கிறான்? என்ற விஷயங்கள் ஒருவர்க்கும் தெரியா. அந்த ஊராரும் அவனை யவற்றைப் பற்றிக் கேட்பதில்லை. ஏனெனில் தங்கள் நாட்டில் விருந்தாளியாக வந்திருக்கும் ஒருவரை அத்தகைய கேள்விகள் கேட்பது மரியாதையல்ல, நாணயமல்ல என்று அவர்கள் கருதுவது வழக்கம். அதிலும் அப்பூமியின் சொந்தக்காரராகிய தைரியநாதம் பிள்ளையோ "நமது வீட்டில் விருந்தாளியாக வந்திருக்கும் ஒருவரை நாம் அத்தகைய கேள்விகள் கேட்பது மிக்க நாணயக் குறைவாகும்; மேலும் நாம் அவரை வைத்துக்கொண்டு போஷிப்பதில் அதிருப்தி யடைந்திருக்கிறோம் என்று அவர் கருதலாகும்" எனக் கருதி ஒன்றுமே கேட்கவில்லை.

அவ்வாறு அவன் சுத்தப் புதுமனிதனு யிருந்தாலும் யாவரும் அவனிடம் அன்பு காட்டி நடந்து கொண்டார் கள். அவன் தனக்குப் பிரியமானவர்கள் வீட்டிற்கு விருந் தாளியாகச் செல்வதும், தனக்குப் பிரியமான காலம்மட் டும் அங்கு விருந்துண்பதும், பிறகு தனக்கிஷ்டமான இன் னெருவர் வீட்டிற்குச் செல்வதுமாக விருந்தான். அப்படி யிருந்தும் நீர் யார்? எங்கிருந்து வந்தீர்? என்ன விஷயமாக வந்தீர்? என்று ஒருவரும் அவனைக் கேட்டவர்களல்ல. சாதாரணமாக மற்ற வூர்களிலுள்ள ஜனங்களாயின் மிக்க ஆவலோடு அவனுடைய விஷயங்களைப்பற்றி விசாரித்திருப் பார்கள். ஆனல் சத்தத்தீவிலுள்ள ஜனங்களோ அப்படிச் செய்வதற்குப் பதிலாக சம்பாஷணையில் அவன் வாக்கி னின்றும் வரும் வார்த்தைகளால் அவனைப் பற்றி எவ் வளவு அறியலாகுமோ அவ்வளவோடு திருப்தியடைந்த வர்களாகக் காணப்பட்டார்கள்.

மார்க்கசேனனே தன் வரலாற்றைப் பற்றிய எந்தச் சங்கதியையும் வெளியிடுகிறவனல்ல. அரேபியா தேசத் திலுள்ள மணல் நிறைந்த பாலைவனம் ஒரு சமயம் ஊற்று நீரைவெளியிட்டாலும் வெளியிடலாம்; மார்க்கசேனன் வாயிலிருந்து மட்டும் அவனைப்பற்றிய ஒரு சங்கதியும் வெளிவராது. அத்தீவார் மரியாதைக்காக மிக்க மனக் கஷ்டத்தோடேயே தங்கள் ஆவலை யடக்கிக் கொண்டிருந் தார்கள்.

ஆகையால், மார்க்கசேனனைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்த சங்கதி மிகச் சொற்பமே. அதாவது: அவன் ஒரு நாள் ஒரு உலாந்தா நாட்டுக் கப்பலில் வந்து இலவ ணூரில் இறங்கினன். அக்காலத்தில் இலவணூர் அத்தீவின் தலை நகரமாய் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனல் விருத்தி யடைந்துகொண் டிருந்தது. அவனேடுகூட அவன் புத்

திரன் ஒருவன் மட்டும் வந்தான். அப்போது புத்திரனுக்குச் சுமார் பதினன்கு வயதும், தந்தைக்குச் சுமார் நாற்பதுக்குமேற்பட்ட வயதும் இருக்கும். அவர்கள் ஏறி வந்த உலாந்தாக் கப்பலின் கப்பித்தான் பன்முறை யத்தீவிற்கு வந்திருப்பவன். அவன் ஜின்சாராயமும், தின்பண்டங்களும் கொண்டுவந்து அத்தீவி லுற்பத்தியாகும் மாடுகள், பதனிட்ட பட்சிகள், கம்பளி முதலியவைகளுக்கு மாற்றுவது வழக்கம். இதனல் அத்தீவில் அவனுக்கு அனேகர் நண்பர்களுண்டு. அவன் மார்க்கசேனனைப் பற்றி அங்குள்ள நண்பர்களுக்குச் சிபாரிசு செய்தான். அதாவது "இந்த ஆளின் உடை, மற்ற சாமான்கள் முதலியவற்ருல் இவன் பூரணமான ஒரு பெரியமனிதனென்று நன்ருகத் தெரிகிறது; அதோடு கப்பலை விட்டிறங்கும்போது என் மாலுமிகளுக் கெல்லாம் தாராளமாகப் பரிசளித்தான்; மிக்க நல்ல பெரியமனிதன்" என்று மட்டுமே கப்பித்தான் கூறினன். ஆயினும் அம்மொழிகளே மார்க்கசேனனுக்கு அனேகம் மரியாதையான மனிதர்களை யறிமுகமாக்கி வைத்தன. பிறகு அவன் அனேக விஷயங்களில் ஞானமுடையவன் என்று தோன்றவே சுலபமாய் யாவரும் அவனுக்குச் சினேகராகி விட்டார்கள்.

அவனைப் பற்றிய அவ்வளவு உண்மைகூட அவர்களே யறிந்து கொள்ளவேண்டி யிருந்தது. ஏனெனில் மார்க்கசேனன் தன் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசாமலிருப்பதோடு பொது விஷயங்களைப் பற்றியும் தாராளமாகச் சம்பாஷிப்பதில்லை. ஆயினும் ஒவ்வொரு சமயங்களில் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றிய வாதத்தில் அவன் தலையிட நேர்வதுண்டு. அச்சமயங்களில்தான் அவன் கல்வியும் விஷயஞானமும் உடையவன் என்று அத்தீவார் அறியநேர்ந்தது.

சில சந்தர்ப்பங்களில் "இவர்கள் நமக்கு இவ்வாறு உபசரணைசெய்து நம்மை யாதரிக்கிறார்களே. இதற்கு ஈடாக நாம் ஏதேனும் இவர்களுக்குச் செய்யவேண்டும்" என்று கருதியவன்போல், மார்க்கசேனன் தன் சுபாவத்திற்கு மாறாகத் தன் மனதை யொருவாறு அடக்கிக்கொண்டு, முக்கியமான விஷயங்களில் அவர்களோடு கலந்து சம்பாஷிக்கலாயினான். அத்தகைய சமயங்களில் தான் அந்தத் தீவிலுள்ளோர் அவன் மிக்க கல்விமானென்றும், அனேக விஷயங்களை யறிந்தவனென்றும் நினைத்தார்கள். ஆனால் அத்தீவார் யாவற்றினும் முக்கியமானதாகக் கருதப்பட்ட படகோட்டும் தொழிலும், கப்பலைப்பற்றிய விஷயங்களும் மட்டும் இவனுக்கு அடியோடு தெரியாவென்று தீர்மானித்துக் கொண்டார்கள். இவ்வளவு கல்வி யறிவும் மற்ற ஞானங்களும் உடையவனுக்கு இது தெரியாமற் போய் விட்டதே யென்று மிக்க வியப்படைந்தார்கள். விவகாரம் அவ்வாறிருந்தது.

மார்க்கசேனன் மேற்கண்டவாறு விஷயங்களில் தூண்டப்பட்ட காலம் தவிர மற்ற வேளைகளில் சோர்ந்த முகத்தோடு மௌனமாக விருப்பதே அவன் சுபாவம். சந்தோஷமாய்க் கேளிக்கையில் காலங்கழிக்கும் ஓரிடத்தில் சிக்கினால் அவன் உடனே அக்கூட்டத்தை விட்டுக் கிளம்பி விடுவான். சாதாரணமாய் மாதர் ஒருவர் விஷயத்தைப்பற்றி யறிய மிக்க ஆவலுடையவர்கள். அத்தீவிலுள்ள மாதர்களும் அம்மாதிரி குணமுடையோரே. அங்கு அனேகம் அழகு வாய்ந்த கன்னிகைகளிருக்கிறார்கள். ஆனால் மார்க்கசேனனோ மாதர்கள் இருக்கும் இடத்தில் கூட நெருங்குவதில்லை. இவற்றோடு அவனிடம் இருந்த இன்னொரு குணம் தைரியநாதனுக்கு ஒருவித அதிருப்தியை யளித்தது.

அதாவது தைரியநாதன் வடநாட்டுத் தாய் தந்தையர்க்குப் பிறந்தவன்; அந்த நாட்டாசாரப்படி அவன் சாராயம் அருந்துவது நாகரீகமான வழக்கம் என்று கருதுபவன்; எந்த நோய் வரினும் கொஞ்சம் சாராயம் அருந்தினல் சுகமடையலாகும் என்ற அபிப்பிராயமும் நம்பிக்கையுமுடையவன். மார்க்கசேனனே இந்த அபிப்பிராயத்திற்கு உடன்படுகிறவனல்ல. இவன் ஜலம் தவிர வேறெவ்வித பானமும் அருந்துவதில்லை. தைரியநாதன் பன்முறை இவனை வேண்டிப்பார்த்தும் இவன் அதற்கு உடன்படவில்லை. இது அத்தீவின் தலைவனுகிய தைரியநாதனுக்கு மிக்க மனவருத்தத்தை யளித்தது. தன் முன்னோர்களுடைய ஆசாரத்தை யிவன் அகௌரவப்படுத்தியதாகவும் அலட்சியம் செய்ததாகவும் தைரியநாதனுக்குத் தோன்றியது.

முதலில் இவன் நல்ல கல்வியும் விஷய ஞானங்களும் உடையவனென்பதும், மிக்கசெல்வவான் என்று தோன்ருவிடினும், கூடியவரையில் பொருளுடையவனே யென்பதும் தெரிந்தன. ஆயினும், இத்தகைய பிரதான விஷயத்தில் நமக்கு மாருக நடக்கும் இவன் வேறெந்த விஷயத்தில் அதற்கு ஈடு செய்யப்போகிருன் என்று தைரியநாதன் வருத்தமடைந்தான். தைரியநாதன் தன் வரையில் தினம் படுக்கைக்குச் செல்லும்போது பூரணமாகப் புத்தி சுயாதீனமற்ற நிலைமையிலில்லாவிடினும், தான் ஒரு நாளேனும் புத்தி பூரணத்தெளிவான நிலைமையில் படுக்கைக்குச் சென்றதில்லை என்று கௌரவமாய்க் கூறும் சுபாவமுடையவன். அப்படிப்பட்டவனிடம் மார்க்கசேனன் இம்மாதிரி நடந்து கொண்டது அவனுக்கு அகௌரவமாகத் தோன்றியது சுபாவமே. மார்க்கசேனனிடம் முன் கூறப்பட்ட குணங்களோடு சம்பாஷணையில் சாமார்த்தியம் காட்டும் குண

மும் இருந்தது. அதனால் அவன் மிக்க புத்தி சாமார்த்திய முடையவனென்று யாவராலும் கருதப்பட்டான். இவை யாவற்றையும் விட அதிசயமான விஷய மென்னவெனில், மார்க்கசேனனுடைய இரகசியம் ஒருவராலும் அறிய முடியாததாகவே யிருக்கிறது. அவன் அங்கு வந்திருக்கும் சங்கதியே யாவர்க்கும் ஒரு விடுகதைபோ லிருக்கிறது. ஏனெனில் அவன் பல நாட்கள் தங்களிடமிருந்து, பலர் வீட்டில் விருந்துண்டு யாவர்க்கும் கௌரவமான சிநேகன் போலவே நடந்துகொண்டிருந்தாலும் அவனைப் பற்றிய சங்கதிகளில் ஒன்றுமே ஒருவருக்கும் தெரியாது. இதை யறியவேண்டுமென்ற ஆவல் பெரும்பாலார்க்குண்டு. ஆனால் அதை யெப்படி யறிவது என்ற மார்க்கமே அவர்களுக்கு விளங்கவில்லை.

அவன் புத்திரனைக் கேட்டறியலாமென்றால் அப்படிச் செய்வது நம்மிடம் வந்திருக்கும் ஒரு விருந்தாளியை அகௌரவப்படுத்தியதாகும் என்று அத்தீவாருக்கே கலக்கமாக விருக்கிறது. அதோடு அவன் புத்திரனோ ஒரு சிறு பாலன் போல் யாரிடமும் எச்சங்கதியைப்பற்றியும் பேசுவதேயில்லை. சிலர் இச்சிறுவன் தன் தந்தையிடம் கொண்டிருக்கும் அச்சத்தால்தான் இப்படி மிக்க அடக்கமாக விருக்கிறான் என்று கருதினார்கள்.

2-வது அத்தியாயம்.

தன்னிடம் வந்திருக்கும் அதிதி சில விஷயங்களில் தனக்கு அதிருப்தியாக நடந்து கொண்டாலும் தைரியநாதன் அவனை யன்போடும், மரியாதையோடுமே ஆதரித்து வந்தான். இவ்வாறிருக்கையில் தைரியநாதனுக்கு மிக்க வியப்பை யளிக்கத்தக்க ஒரு சம்பவம் திடீலென்று நேர்ந்தது.

அதாவது, ஒருநாள் தைரியநாதன் சாராயம் அருந்திக்கொண்டிருக்கிறான். அவன் எதிரிலிருக்கும் மார்க்கசேனன் வழக்கம்போல் வெறும் சலம் அருந்திக்கொண்டிருக்கிறான். அச்சமயத்தில் மார்க்கசேனன் அத்தீவின் சொந்தக்காரனாகிய தைரியநாதனை நோக்கி "நண்பரே! நான் ஜலபுரத்திலிருக்கும் தங்கள் புராதன மாளிகையில் வசிக்க விரும்புகிறேன். தயவுசெய்து அதை எனக்கு வாடகைக்கு விடும்படி வேண்டுகிறேன்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே தைரியநாதன் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு விட்டான். ஏனெனில் அம் மாளிகை நெடுநாட்களாக அடைக்கப்பட்டிருக்கிறது. அந்த நாட்டிலிருப்போரே அங்கு சென்று வசிக்க உடன்பட மாட்டார்கள். அத்தகைய விடத்தில் இவன் போய் வசிக்க விரும்புவது தைரியநாதனுக்கு மிக்க அதிசயமாகவே யிருந்தது. அவன் முதலில் "அப்பா! சனி விட்டது. நாம் சந்தோஷமாகக் காலத்தைக் கழிப்பதற்கு இவன் இடையூறாக விருந்தான். இவன் ஒழிவதே மேல்" என்று கருதினான். ஆயினும் அவன் உதாரகுணம் உடனே மேலெழும்பியது. அதன்மேல் அவன் தன் சுய நலத்தைக் கூறக்கருதாமல் மார்க்கசேனனை நோக்கி, "அந்த மாளிகையிலா வசிக்கக் கருதுகிறீர்! அந்தோ! அங்கு சரியான சாமான்களும் இல்லை; அருகில் தகுதியான ஜன சகவாசமும் கிடைக்காது. ஆகாரத்திற்கு வேண்டிய பொருள்களும் சரியாகக் கிடைக்கமாட்டா" என்றார்.

மார்க்கசேனன்:—"நீர் கூறுவன என் மனதிற்கு மிக்க சந்தோஷத்தை யளிக்கும் சங்கதிகளாக விருக்கின்றன. இவற்றினும் எனக்கு அதிக திருப்தியை யுண்டாக்கத்தக்க சங்கதிகளைத் தாங்கள் கூறியிருக்க முடியாதென்றே நான் கருதுகிறேன்" என்றான்.

தைரியநாதன்:—அங்கு சுற்றுப் பக்கங்களில் நெடுந்தூரம் வரையில் நமது சகவாசத்திற்குத் தக்க மனிதர்கள் கிடைக்க மாட்டார்கள்.

மார்க்கசேனன்:—ஆ! அதுவே எனக்கு மிக்க சந்தோஷமான சமாசாரம். என்வாசஸ்தலத்தினருகில் மனித சஞ்சாரமில்லாமலிருப்பதே எனக்கு மிக்க சந்தோஷம். ஆகவே இனித்தாங்கள் அம்மாளிகைக்கு நான் செலுத்த வேண்டிய வாடகையின்னதென்பதையும், அதைப்பற்றிய நிபந்தனை ஏதேனு மிருந்தால் அதைப் பற்றியும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தைரியநாதன்;—“நெடுநாட்களாக ஒருவரும் குடியிராத அம்மாளிகைக்கு அப்படி அதிக வாடகை யிருக்க ஒரு காரணமுமில்லை. அது குளிருக்கும் காற்றிற்கும் வசிக்க வென்னமோ மிக்க நல்ல விடமே. எத்தகைய குளிரும் புயற்காற்றும் அதற்குள் நுழைய முடியா. ஆயினும் இங்குள்ளவர்களில் ஒருவர் போய் அந்த ஜலபுர மாளிகையில் வசிப்பதாகக் கூறினாலோ அவரைப் பைத்தியக்காரர் என்று மற்றவர்கள் கருதுவார்கள். அப்படியிருக்க அன்னிய நாட்டிலிருந்து வந்த நீர் அங்கு சென்று வசிக்க விரும்புகிறிர். எதற்கும் நீர் செய்ய உத்தேசிக்கும் காரியம் எத்தகையதென முன்னடியே நன்றாகச் சிந்தியும்” என்றான்.

மார்க்க:—நான் சிந்திக்கவேண்டிய தொன்றுமேயில்லை. தங்களுக்கு விருப்பமிருந்தால்....

தைரிய:—நான் இவ்வளவு தூரம் இதைப்பற்றிப் பேசுவது நீர் அங்கு போய் வசிப்பது எனக்குப் பிரியமில்லாததாலல்ல. நீர் சீதோஷ்ணத்தில் இத்தீவை விட மேலாகவுள்ள ஊரிலிருந்தே வந்திருப்பீர். இங்கு வரும் பிரயாணிகளில் ஏறக்குறைய எல்லாருமே

அப்படித்தான் கூறுவது வழக்கம். அப்படியிருந்தும் அண்டை அயலில் ஜன சஞ்சாரமில்லாத அந்த ஏகாந்த ஸ்தலத்தில் வசிக்க விரும்புகிறீரே அதற்காகவே நான் வாதிப்பது.

மார்க்க:—நண்பரே! உமக்கு மிக்க வந்தனம். சீதோஷ்ணத்தைப்பற்றி எனக்கு அவசியமேயில்லை. மூச்சு விடப் போதுமான காற்றிருந்தால் எனக்குப் போதும். அடிக்கிற காற்று அரேபியா தேசத்தின் பாலை வனத்திலிருந்து வந்தாலும் சரி, வட கடலிலிருந்து வந்தாலும் சரி, எனக்கு எல்லாம் ஒன்றே.

தைரிய:—இருக்கட்டும் நீர் ஜலபுரத்தைப் பார்த்தீரா?

மார்க்க:—நான் பார்க்கவில்லை.

தைரிய:—“அப்படியாயின் நீர் செய்யக் கருதும் காரியம் இத்தகையதென உமக்குத் தெரியாது. இதோ இம் மாதிரி செப்பனிட்ட நல்ல பாட்டை வீட்டெதிரில் செல்கிறதென்றும், வீட்டு வாயிலில் நின்றபடி மச்சம் வாங்கச் சௌகரியமாக உப்பங்கழி யருகிலேயே யிருக்கிறதென்றும், எதிரில் கண்களுக்கு இரமணீகரமான தோட்ட மிருக்கிறதென்றும், மாலை வேளைகளில் சுகமான தென்றல் வீசுமென்றும் எண்ணிக் கொண்டிருந்தீரோ அது பெருந்தவறாகவே முடியும். ஜலபுரத்தில் இவைகளில் ஒன்றுமேயிராது. அப் பயங்கரம் பொருந்திய செங்குத்தான பாறைகளின் மேல் அலைகள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து சதா மோதிக் கொண்டிருக்கும். அகோரமான சத்தமே கேட்கும். கடற்பட்சிகள் எந்நேரமும் கத்திக்கொண்டிருக்கும். சங்கீதம் வேண்டுமாயின் அனுபவிக்கலாம்” என்றான்.

மார்க்கசேனன் அவன் கூறிய யாவும் கேட்டபின் “நண்பரே! தாங்கள் கூறிய சத்தங்களெல்லாம் இருந்தால்

எனக்கு அக்கரையில்லை. மனிதர்களின் இராகத்துவேஷாதி சத்தங்கள் இல்லாமலிருந்தால் அதுவே யெனக்குப் போதும்'' என்ருன்.

தைரிய:—ஆகா. நான் சொன்ன சத்தம் தவிர மனித சம்பந்தமான எவ்விதச் சத்தமும் கேட்க முடியாது.

மார்க்க:—“மாதர்களின் வாயாடிச் சத்தமும் சச்சரவுச் சத்தமும் என் செவிகளில் விழாதென்றறிவது எனக்குமிக்க சந்தோஷத்தையளிக்கிறது'' என்ருன்.

உண்மையில் அச்சமயம் அருகிலிருந்த தோட்டத்தில் இரண்டு பெண்கள் பாடும் சத்தம் அவன் செவிகளில் விழுந்தது. அதையுணர்ந்த தைரியநாதன், “ஆ! தோட்டத்தில் என் புத்திரிகளாகிய மீனுளும் புனிதமும் பாடுவதைக் கேட்டே நீ யிப்படிக் கூறுகிருய். என்வரையில் குயிலின் கீதத்தையும், வீணையின் நாதத்தையும் கேட்பதைவிட என் புத்திரிகளின் சிறுகுரலொலியைக் கேட்பதே செவிக்கின்பம் எனக் கருதுகிறேன். ஆ! நீர் ஜலபுரம் சென்று வசிக்கப் போய் விட்டால் தங்களோடு கூட விளையாடிக்கொண்டிருந்த உமது புத்திரன் முருகப்பன் இல்லாமலிருப்பது என் பெண்களுக்கு வருத்தமாகவே யிருக்கும்'' என்ருன்.

மார்க்க:—அவன் இல்லாதிருந்தாலும் அவர்கள் சமாளித்துக் கொள்வார்கள். எல்லாம் பழக்கந்தானே. காலத்தால் சரிப்பட்டுப்போம். சிறியவர்களோ பெரியவர்களோ வேறு விளையாட்டுத் தோழர்களையவர்கள் சம்பாதித்துக் கொள்வார்கள். இனி என் கேள்விக்கு முடிவான ஒரு விடையளியுங்கள். ஜலபுரத்திலிருக்கும் தங்கள் மாளிகையை யெனக்கு வாடகைக்கு விடத் தங்களுக்கு விருப்பந்தானே?

தைரிய:—நான் கூறவேண்டிய யாவும் கூறியாய் விட்டன.

உமக்கு அங்கு வசிக்கப் பிரியமாயிருக்கிற வரையில் நான் சந்தோஷமாகவே யதற்குச் சம்மதிக்கிறேன்.

மார்க்க:—சரி. வாடகை முதலிய விவரங்களைக் கூறி விடுங்கள்.

தைரிய:—"ஆ! வாடகையா? கூறுகிறேன். அம்மாளிகையைச் சேர்ந்த பூமி கொஞ்சம் இருக்கிறது. அது முன்பு தோட்டமாக விருந்தது. இப்போது அது காய்கறி வகைகள் பயிரிட உதவும். அதையும் நீர் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பின்னுலுள்ள கழியில் மீன் பிடித்துக் கொள்ளலாம். இவற்றிற் கெல்லாம் வருடத்திற்கு எட்டு ரூபாயும் இருநூற்று நாற்பது இராத்தல் வெண்ணெயும் கொடுப்பது அதிகமல்ல வென்றே நினைக்கிறேன்" என்ருன்.

மார்க்கசேனன் அந்த நிபந்தனைகளை மிகச் சுலப மாகவே கருதி அவற்றை யொப்புக்கொண்டு அது முதல் ஜலபுரத்திலுள்ள மாளிகையில் வாசம் செய்யத் தொடங் கினான். அவன் கூறியபடியே அங்குள்ள அசௌகரியங் களை யொரு கஷ்டமாகவே கருதாமல் பூரண திருப்தி யோடேயே அங்கு வசித்து வந்தான்.

அந்த மாளிகையைச் சேர்ந்த பூமியில் கொஞ்சம் குடிகளும் வசித்துக் கொண்டிருந்தார்கள். முதலில் அவர் கள் தங்களைவிட உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஒருவர் மாளி கையில் வசிக்க வந்திருக்கிருர் என்றறிந்ததே மிக்க கலக் கமடைந்து விட்டார்கள். ஏனெனில் அக்காலத்தில் பூமிக் குரியவர்கள் மேலான அந்தஸ்திலிருப்பவர்களானுல் குடி களுக்குப் பலவழிகளில் தொல்லையுண்டு. முதலாளி கூப் பிடும்போது அவனுடைய அடிமைபோல் போய் அவன் இட்ட வேலைகளை அவர்கள் செய்யவேண்டும். அந்தோ! அது மட்டுமல்ல. இந்த ஏழைகள் தாங்கள் நெற்றி வியர்வை

யிற்று விழக் கஷ்டப்பட்டதனு லுண்டாகிய பலன்களி லிருந்து, அதாவது, தானியம் காய்கறி பழவகைகள், பால் வெண்ணெய், முதலியவற்றிலிருந்து, முதலாளி கேட்பதை யளிக்கவேண்டும்.

ஆனல் கொஞ்ச காலத்திற்குள் மார்க்கசேனனல் தங்களுக்கு அத்தகைய தொந்தரை யில்லையென்று குடிகள் தெரிந்துகொண்டார்கள். அவனுடைய சொந்தவருமானம் கொஞ்சமாயிருப்பினும் அதிகமாக விருப்பினும் அவ னுடைய சௌகரியங்களுக்குப் போதுமானதாகவே யிருந் தது. ஏனெனில் அவனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய செல வுகளெல்லாம் மிக்க சிக்கனமாகவே யிருந்தன. அவனு டைய வீட்டில் நடக்கும் சாப்பாட்டுச் செலவு அத்தீவி லுள்ள ஒரு சாமானியக் குடியானவன் செலவை விடக் குறைவாகவே யிருந்தது. அங்கிருந்த குடிகள் இத்தகைய ஆள் நம் காணிகளுக்கு முதலாளியாக வந்தது நமக்கு நற் காலமே. இவனல் நாம் இலாபமே யடையலாம் என்றறிந் ததும், இவன் சொந்த விஷயம் எப்படியிருந்தாலும் நமக் கென்ன வென்று விட்டு விட்டார்கள்.

அந்தோ அற்பபுத்தியுடைய மனிதர் தங்களுக்குக் கிடைக்கும் இலாபத்தோடு, திருப்தியடைவதில்லை. அதி லும் இக்குடியானவர்கள் அடைந்த இலாபம் எதிர்பாரா தது. வேறொரு முதலாளியாக விருந்தால் இவர்களுக்கு எவ்வளவோ கஷ்டத்தைக் கொடுப்பதோடு, இவர்கள் கஷ் டப்பட்டு சம்பாதித்த பொருள்களிலிருந்து எவ்வளவோ கைப்பற்றிக் கொண்டிருப்பான். இவர்கள் அவ்வளவோடு திருப்தியடையாமல் அவனை யேமாற்றி அவன் பொரு ளையே அபகரிக்க முயன்ருர்கள்.

எப்படி யெனில் வீட்டுக் காரியஸ்தி பரிசாரகன் முதல் ஒன்று சேர்ந்துகொண்டு அவன் குடும்பத்திற்கு வாங்கும்

பொருள்களுக்கெல்லாம் அதிக விலைவைத்து அப்பணத்தை யிவர்கள் பகிர்ந்துகொண் டிருந்தார்கள். இவர்கள் இம் மாதிரி தன்னை மோசம் செய்வது மார்க்கசேனனுக்குத் தெரியாமலில்லை. ஆயினும் அவன் காலம் முழுமையும் தான் இந்திரபுரியிலிருந்து வரவழைக்கும் பத்திரிகைகள், தத்துவ சாத்திர நூல்கள் ஆகிய இப்படிப்பட்டவற்றை வாசிப்பதிலும், தனியே தன் வாசக அறையில் சிந்தனையி லிருப்பதிலேயுமே கழிக்கப்பட்டது.

ஆனால் "பல நாளைய கள்ளன் ஒரு நாளைக் ககப்படு வான்", "காணியாசை கோடிகேடு" என்ற பழமொழி களுக்கேற்ப, கடைசியில் ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் கொட்டம் அடியோ டடக்கப்பட வேண்டிய வேளைவந்து விட்டது. ஒருநாள் மார்க்கசேனன் மாளிகையின்மேல் மாடியிலுள்ள ஒரு அறையில் உட்கார்ந்திருக்கிறான். அப்போது தான் அவன் இந்திரபுரிக்கு எழுதியிருந்த சில புத்தகங்கள் நாள் பட்டு ஆலசியமாய் அவனுக்கு வந்து சேர்ந்ததால் அவன் மிக்க ஆவலோடு அவற்றைப் பார்த் துக்கொண்டிருக்கிறான். அச்சமயம் கீழிருந்து ஆட்கள் சச்சரவுசெய்யும் சத்தம் அவன் செவிகளில் வீழ்ந்தது.

நடந்த சங்கதி யென்னவெனில் ஜலபுரமாளிகையில் மார்க்கசேனனுக்கு வீட்டுக் காரியஸ்தியாயிருக்கும் கிழ விக்கும், அவனுக்கு மீன் கொண்டுவந்து கொடுக்கும் ஆளுக்கும் சச்சரவு நேர்ந்தது. மீன் கொண்டு வந்தளிப் பவன் இரங்கன் என்பவன். அவன் எத்தகைய கொடிய புயற் காற்றிலும் கடலில் நெடுந்தூரம் படகோட்டிச் செல் வதில் மிகக் கெட்டிக்காரன். வீட்டுக் காரியஸ்திக்கும் மீன் விற்பவனுக்கும் நேர்ந்த சச்சரவில் பேச்சுவளர்ந்து கூச் சல் அதிகமாகிவிட்டது. தன் நிம்மதியைக் கெடுக்க

நேர்ந்த- இச்சம்பவத்தால் மார்க்கசேனன் மிக்க கோப மடைந்து துரிதமாகக் கீழே யிறங்கிவந்து சங்கதியென்ன வென்று விசாரிக்கத்தொடங்கினுன். அவன் கோபத் தோடு தாட்சணிய மின்றிக் கேட்ட கேள்விகளால் அவர் கள் தங்கள் சங்கதிகளை மறைக்க எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களால் முடியவில்லை. ஆகையால் அவர்கள் சங்கதி பூரணமாகக் கடைசியில் வெளிவந்து விட்டது.

நடந்த சங்கதி யென்னவெனில் மாளிகைக்காக வாங் கும் சாமான்களின் விலையை ஒன்றுக்கு இரண்டு படுத்தி முதலாளியிடம் பணம் வாங்குவது வழக்கம்-இச்சந்தர்ப் பத்தில் மீன்காரன் விலையில் இரண்டத்தனை யாக்கப்பட் டது. அதைப் பகிர்ந்து கொள்வதில்தான் இவர்களுக்குள் விவாதம் உண்டாகியது. இச்சங்கதியுள்ளது உள்ள படியே வெளியாகிக் குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை யொப்புக்கொண்டதும், மார்க்கசேனன், மிக்க வெறுப் போடு கோபத்தணல் வீசும் கண்களால் அவர்களை நோக் கியபின் கடைசியில் வீட்டுக்காரியஸ்தியை நோக்கி,

"ஏ கிழமே! நீ இந்த விநாடியிலிருந்து என் வீட்டை விட்டுப் போய்விடவேண்டும். நான் உன்னை என் வேலையி னின்றும் நீக்கி விடுகிறேன் தெரியுமா? நீ பொய் கூறுபவ ளும், கள்ளியும், நன்றி கெட்டவளுமாக விருக்கிறுயென் பதற்கு மட்டுமல்ல-இவ்வளவு குணங்களும் உன்னிடமிருக் கின்றன. மற்றபடி எதற்காக வெனில் நீ என் வீட்டில் பஜாரியைப் போல் சாபனை வார்த்தைகளை மொழியத் துணிந்ததற்காகவே உன்னை இந்த விநாடி முதல் வேலையி லிருந்து நீக்கிவிட் டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, மீன் காரனுகிய இரங்கனை நோக்கி,

"ஓ கள்ளப்பயலே! என் வேலைக்காரருக்கு இலஞ்சம் கொடுத்து என்னிடம் ஒன்றுக்கிரண்டாக விலை வாங்கத்

துணிந்த மோசக்காரனே! நீ ஒரு புது மனிதனை யுன்மனம் போனபடி ஏமாற்றி மோசம் செய்யலாமென்று எண்ணிக் கொண்டாய். ஆனால் உன் மோசங்களை நான் இது வரையில் அறியாமலே கண் மூடிக்கொண்டிருந்தேன் என்று நீ எண்ணவேண்டாம். எனக்கு யாவும் தெரியும். இந்த அற்ப விஷயங்களில் நாம் பிரவேசிப்பது சரியல்ல. போகப்போக நமது உதார குணம் தெரிந்தால் இவர்கள் தங்கள் கள்ளச் செய்கையை யடக்கி விடுவார்கள் என்று கருதினேன். நீங்களோ என் உதார குணத்திற்காக என்னிடம் நன்றி காட்டுவதை விட்டு என்னையே யேமாற்றிப் பணம் பறிக்கத் தொடங்கிவிட்டீர்கள். இதுகாறுமிருந்த உங்கள் முதலாளிகள் உங்களை யெப்படிக் கசக்கிக்கொண்டு அடிமைகள் போல் நடத்திக்கொண் டிருந்தார்களென்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறே, இன்னும் அதனினும் அதிகமாகவே உங்களைக் கஷ்டப்படுத்த எனக்கு எல்லா வழிகளும் தெரியும். தெரிகிறதா நான் கூறுவது? இனியும் நீங்கள் எனக்குச் சற்றேனும் கோபமூட்டினீர்களோ பிறகு உங்கள் பாடு பெரும் திண்டாட்டமாய்விடும். எந்தெந்த வழிகளில் உங்களுக்கு இடுக்கண் செய்யவேண்டுமோ அவை யாவும் எனக்கு நன்றாகத் தெரியும். பத்திரம். பத்திரம்'' என்றான்.

மீன்காரனாகிய இரங்கன் இம்மொழிகளைக் கேட்டதே பேரிடி விழுந்தவனாகி விட்டான். அவன் இம்மாளிகைக்கு மீன் கொடுத்துக்கொண் டிருப்பதால் நல்ல இலாபம் சம்பாதிக்கலாம் என்று எண்ணி யிருந்தான் - இப்போது அதற்கு மோசமாய்விடும்போ லிருந்தது. ஆகையால் இனி என்ன செய்யலாமென்று சிந்தித்தான். அவனுக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. கடைசியில் தந்திரமாய் மார்க்கசேனனை நோக்கி, "எஜமானே! தயவுசெய்து

இந்த மீனைத் தாங்கள் காணிக்கையாக எடுத்துக்கொள்ளுங்கள். என்னைத் தயவுசெய்து மன்னியுங்கள்'' என்று பிரார்த்தித்தான்.

ஆனால் அதற்குள் மார்க்கசேனனுக்குக் கோபம் அதிகமாகிவிட்டது-இரங்கன் வார்த்தை யவன் செவிகளில் ஏறவேயில்லை-அவன் அடக்கமுடியாக் கோபத்தோடு, அம் மீனுக்கு இரங்கன் என்ன விலை முதலில் கூறினனோ (அதாவது ஒன்றுக்கு இரண்டு விலை) அதே விலையை யவன் முகத்திற்கு முன் வீசிவிட்டு, அந்த மச்சத்தை யெடுத்துக்கொண்டு போய்ச் சாளரத்தின் வழியாய் வெளியில் எறிந்து விட்டான்.

இரங்கன் இக்காட்சியைக் கண்டதே பெருந் திகிலடைந்து விட்டான். கீழே எறியப்பட்ட பணத்தையும் எடுக்கவில்லை. வெளியில் எறியப்பட்ட மீனையேனும் எடுக்க நினைக்கவில்லை. பேசாமல் பேயால் துரத்தப்பட்டவன் போல் அங்கிருந்து ஒரே ஓட்டமெடுத்தான். அவன் மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடி அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்று அங்கிருந்த நண்பர்களைக் கண்டு அவர்களிடம் நடந்த சங்கதியைக் கூறி,

“அப்பா! நாங்கள் இந்த ஆளின் உண்மைக்குணத்தை யறியாமல் பெரிய முட்டாள் தனம் செய்து விட்டோம்-பாபம்! அக்கிழவி வேலையிலிருந்து - மாளிகையிலிருந்தே துரத்தப்பட்டாள்-இனி நாம் அந்த ஆளிடம் இத்தகைய வேலையைக் காட்டினல் நம்மனைவர்க்கும் பெருங் கஷ்டமாக முடியும் என்பது நிச்சயம்'' என்று முறையிட்டுக் கொண்டான்.

அதற்குள் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட அவ்வீட்டுக்காரியஸ்தியாகிய மூதாட்டியும் அங்கு வந்து தன் துர்ப்பாக்கியத்தைக் கூறி முறையிட்டுக்கொண்டாள். அவ்வூரின் தலைவன் ஒரு வயது முதிர்ந்த பெரிய மனிதன். அவன் இவர்கள் கூறிய சங்கதிகளனைத்தும் கேட்டுக்கொண்டபின்,

"அந்த முதலாளி எவ்வளவு அதிகமாய்க் கோபம் செய்து கொண்டாலும் அதற்கெல்லாம் மூல காரணம் நீங்கள் இதுகாறும் எல்லா சாமான்களையும் அவருக்கு ஒன்றுக் கிரண்டாக விற்றதேயாகும். ஆகையால் குற்றம் நியாயமாய் உங்கள் மீதிலேயே யிருக்கிறது-ஆதலின் இனி நீங்கள் அவர் கோபத்திற்கு ஆளாகாமலிருக்க வேண்டுமாயின் நான் கூறுகிறபடி நடவுங்கள். இனி நூற்றுக்கு இருபத்தைந்துக்கு மேல் நீங்கள் இலாபம் வைத்துக் கொள்ளலாகாது" என்று கட்டளையிட்டான். அதன்படியே எல்லா வர்த்தகர்களுக்கும் கட்டளையிடப்பட்டது. கடைசியில் அத்தலைவர் அனைவரையும் நோக்கி "நூற்றுக்கு இருபத்தைந்து கிடைப்பது உங்களுக்கு நல்ல திருப்தியான இலாபமே அம்மனிதர் உங்களுக்குக் கஷ்டத்தை யளிக்க விரும்பாத உதார குணமுடையவர். ஆகையால் இந்தச் சொல்பமான இலாபம் நீங்கள் பெறுவதை யவர் அறிந்தாலும் சந்தோஷமாகவே யதற்குடன்படுவார். ஆகையால் நீங்கள் அவ்வாறே நடவுங்கள். அதுவே கடவுளுக்கும் பிரீதி" என்றார்.

அந்த ஏற்பாட்டிற்கு யாவரும் ஒப்புக்கொண்டார்கள். அதாவது தங்கள் முதலாளியை நூற்றுக்கு இருபத்தைந்து விகிதம் கொள்ளை யடிப்பதென்று ஒரு மனதாகத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

3-வது அத்தியாயம்.

ஜலபுரத்திலுள்ளவர்கள் மேற்கண்டபடி தீர்மானம் செய்து கொண்டபின் மாளிகையின் காரியஸ்தியைப் பற்றிச் சிந்திக்கலானார்கள். காரியஸ்தியென்றால் வீட்டிற்கு வேண்டிய சகலவஸ்துக்களையும் அவளே சேகரம் செய்யவேண்டும். சமையல் விவகாரம் முதல் யாவும் அவள் பார்வையிலேயே நடைபெறவேண்டும். ஆகையால் அவளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். சுந்தரம்மாள் என்ற மூதாட்டி அத்தகைய வேலையினின்றும் துரத்தப் பட்டபடியால் யாவரும் அவள் விஷயத்தில் பரிதாபம் கொண்டு எந்தவிதமாக அவளைப் பழைய வேலையில் அமர்த்திவைக்கலாம் என்று ஆலோசிக்கத் தொடங்கினர்கள். மார்க்கசேனனையே வேண்டிக்கொள்ளலாமெனில் அவன் எதிரில்செல்ல ஒருவர்க்கும் தைரியமில்லை. கடைசியில் அவர்கள் எவ்வித ஆலோசனைசெய்தும் ஒரு வழியும் ஏற்படவில்லை.

ஆகையால் அம் மூதாட்டி தனக்குத் தானே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சற்று நேரம் என்ன செய்வதென்று சிந்தித்தாள். அச்சமயம் அவள் மனதிற்கு ஒன்றும் புலப்படவில்லை. அதன்மேல் அவள் வீட்டிற்குச் சென்றாள். இரண்டொரு நாட்கள் கழித்து அவள் மனதில் ஒரு ஆலோசனை தோன்றியது. மார்க்கசேனன் புத்திரனாகிய முருகப்பனுக்கு அவளிடம் விசுவாசமுண்டு. அவள் அடிக்கடி அந்த நாட்டுப் பாட்டுகளைப்பாடி அவனுக்குச் சந்தோஷமுண்டாக்கிக் கொண்டிருந்தாள். அதோடு அத்தீவார் மூட நம்பிக்கையைக் கைக்கொள்வதில் முதல்தர மானவர்கள். அந்தத் தீவில் பேய்கள், இராக்ஷதர்கள், பூதங்கள் முதலியவைகளைப் பற்றிய ஏராள

மான கதைகளுண்டு. சுந்தரம்மாள் வாலிபனுகிய முருகப்பனுக்கு ஒவ்வொரு குகை, குன்று, கானுறு முதலியவற்றின் சம்பந்தமான கதைகளையும் கூறிக்கொண்டிருந்தாள். இதனுல் அவன் உதவியைக்கொண்டு நமது பதவியை யெப்போதும்போல் பெறலாமென்று அவள் கருதினுள்.

அதனுல் சுந்தரம்மாள் ஒருநாள் முருகப்பனைச் சந்தித்து "குழந்தாய்! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. உங்களுக்கு எவ்வளவோ அன்போடு நான் சமையல் செய்து போட்டுக்கொண்டிருந்தேன். உன்னை யென் சொந்தப் புத்திரன்போல் பாவித்து உன்மேல் அன்புவைத்து நடந்துகொண் டிருந்தேனென்பது உனக்கே நன்ருகத் தெரியும். நான் உங்கள் குடும்ப விவகாரங்களை யென் சொந்த விவகாரங்களாகவே கருதி நடந்து வந்தேன். என் கெட்டவேளை அந்தப் பேராசைக்காரனுகிய இரங்கன் கலகத்தை யுண்டாக்கினுன். உன் தந்தை அதிக கோபங் கொண்டுவிட்டதால் ஆத்திரப்பட்டு என்னை வேலையினின்று நீக்கிவிட்டார். அந்தோ! இந்த வயோதிக காலத்தில் நான் வேறெங்கு செல்வேன்? குழந்தாய்! நீ மனம் வைத்தால் எனக்கு உதவி செய்யலாம். உன் தந்தைக்குக் கூறி எனக்கு மறுபடி வேலை கொடுக்கும்படி செய்யலாம்" என்ருள்.

முருகப்பன்:—"பாட்டி! உன் விஷயத்தில் நான் உண்மையில் மிக்க வியாகூலப் படுகிறேன். ஆனுல் இவ்விஷயத்தில் நான் ஒன்றுமே செய்ய முடியாது. என் தந்தையின் சுபாவம் உனக்குத் தெரியாது. ஆயினும் உன் விவகாரம் அடியோடு கெட்டுப்போகவில்லை. உன் முயற்சியாலேயே யதை நீ மறுபடியடையலாம். அதுவும் சுலபமாயடையலாம்..." என்றதே.

அம்மூதாட்டி மிக்க சந்தோஷமடைந்து "ஆ! என்

தங்கமே! நீ எனக்கு உதவி செய்வாயென்று நானறிவேன். நான் இப்போது என்ன செய்யவேண்டும் என்பதைக் கூறு; உன் கட்டளைப்படி நடந்து கொள்கிறேன்" என்றாள்.

முரு:—பாட்டி! என் தந்தைக்கு எளிதில் கோபம் வராது. வந்தால் காட்டுத்தீப்போல் மிக்க ஆத்திரமுண்டாகும். ஒருவரும் அவர் கோபாக்கினியின் முன் நிற்கமுடியாது. ஆனால் எவ்வளவு தீவிரமாக அவருக்குக் கோபம் வந்ததோ அவ்வளவு தீவிரமாக அது மாறி விடும். அது மட்டுமல்ல; "நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்ற ஆன்றோர் மொழிப்படி அவர் கோபம் மறுபடி சீக்கிரம் சர்வசாந்த மடைந்து விடும். இன்று தமக்கு பிரமாதமான கோபம் வந்ததன் காரணத்தையும் அந்த விஷயத்தையும் மறுநாள் அடியோடு அவர் மறந்து விடுவார். திருட்டாந்தமாய்ப் பார். என் தந்தை யுன்னை வேலையினின்றும் நீக்கி மூன்று நாட்களாகிவிட்டன வல்லவா? இன்னும் உனக்குப் பதில் வேறு எவரையும் அவ்வேலைக்கு வைக்கவில்லை. சாப்பாட்டிலோ நீ நிறுத்தப்பட்டது முதல் எங்களுக்கு அசௌகரியமே. இது வரையில் பதனிட்ட குளிர்ந்த ஆகாரங்களையே யருந்திக்கொண் டிருக்கிறோ மன்றி ஒரு வேளையேனும் புதிதாய்த் தயாரிக்கப்பட்ட ஆகாரம் புசிக்கவேயில்லை. நீ நான் சொல்லுகிறபடி செய். நீ மட்டும் பேசாமல் மாளிகைக்கு வந்து தைரியத்தோடு உன்வேலையைச் செய்யத்தொடங்குவா யாயின் உன்னை யொருவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள்" என்றான்.

அவ்வாலிபன் கூறிய ஆலோசனையைக் கேட்ட மூதாட்டி முதலில் அந்த ஆலோசனையை யொப்புக்கொள்

ளத் தடுமாற்ற மடைந்தாள். மறுபடி வாலிபன் கூறிய சமாதானத்தின்மேல் அப்படியே நடக்க ஒப்புக்கொண்டாள். அவ்வாறே அவள் மாளிகைக்குச் சென்று மறுபடி வேலை செய்யத் தொடங்கினாள். முதல் இரண்டு நாட்கள் அவள் பக்குவமாய்த் தன் எஜமான் எதிரில் செல்லாமலே தப்பித்துக்கொண்டு மறைவாகவே யிருந்தாள். மூன்றாவது நாள் ஜாடையாய் எதற்காகவோ செல்பவள் போல் மார்க்கசேனன் முன் சென்று அங்கிருந்த பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு திரும்பினாள். மார்க்கசேனன் அவளைக் கவனிக்காதவன் போலவே யிருந்தான். "நம்மை வேலையினின்று நிறுத்தியது முதல் இவர்கள் நல்ல ஆகாரம் புசிக்கவில்லையே. இப்போது நாம் நல்ல சூடுள்ள ஆகாரம் தயார் செய்து அளிக்கிறோமே. இந்த விஷயம் முதலாளியின் மனதில் உறுத்து மல்லவா" என்று கருதியிருந்தாள். ஆனால் முருகப்பன் "என் தந்தை யாகாரத்தைத் திருப்தி யாகவே யருந்தினார். ஆனால் இது யார் சமைத்தது என்பது முதலிய ஒரு கேள்வியும் கேட்கவேயில்லை" என்றான். அதோடு இரண்டு மூன்று நாட்கள் வரையில் தான் பன்முறை தன் எஜமான் முன் நடமாடினும் அவன் ஒன்றுமே பேசவில்லையாதலின் அவன் அவ்விஷயத்தை யடியோடு மறந்து விட்டான் என்று அம்மூதாட்டி எண்ணிக்கொண்டாள். அதன்மேல் தன் வேலைகளைச் சுறு சுறுப்பாகச் செய்யத் தொடங்கினாள்.

அவள் அவ்வாறேதான் எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால் ஒருநாள் நேர்ந்த சம்பவத்தால் தன் எஜமான் யாவும் அறிந்தே யிருக்கிறானென்று தெரிந்துகொண்டாள். எப்படியெனில் ஒரு நாள் அவள் வழக்கம் போல் தன் கீழிருக்கும் வேலைக்காரிகளின் மேல் கோபித்துக்கொண்டு கடிந்து பேசவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. அப்

போது அவள் அசங்கிதமான வார்த்தைகளை யுபயோகித்து மிக்க கெட்டியாகச் சத்தமிட்டுக் கூவினள்.

அந்தச் சமயம் மேல் மாடியிலிருந்த மார்க்கசேனன் எதற்காகவோ கீழிறங்கி வந்தவன் இவள் பேச்சுகளைக் கேட்டுவிட்டு அவளை நோக்கி "ஏ கிழவியே! பத்திரம் பத்திரம்! நடந்த சங்கதி கவனமிருக்கட்டும்" என்று மட்டுமே மொழிந்தான். அவன் கூறியவை சொல்ப வார்த்தைகளே யெனினும் அவை நாராசம் காய்ச்சிவிட்டது போல் அவள் மனதில் ஆழப் பதிந்துவிட்டன. அவள் நெடுநாள் தன் நாவை யடக்கிக்கொண்டாள்.

மார்க்கசேனன் வீட்டு விவகாரங்களில் இருப்பது போலவே தன் புத்திரனுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயத்திலும் கண்டிப்பாகவே நடந்துகொண் டிருந்தான். அவன் தன் புத்திர வாஞ்சையை மிக்க அரிதாகவே வெளியிற் காட்டி வந்தான். புத்திரனிடம் எந்தத் தந்தைக்கும் அன்பு மிகுதியுண்டு. இது இயற்கை. மனிதனை மயக்கும் மாயையை வைத்துக்கொண்டிருக்கும் ஆயுதங்களில் புத்திரவாஞ்சையும் ஒன்றே. ஆனல் அந்த வாஞ்சையைப் புத்திரன் முன் காட்டும் தந்தை யவனைக் கெடுத்துவிடுகிறான். அதாவது அவன் தன் அருமை மைந்தனுக்கே தீங்கிழைக்கிறவனாகிறான்.

புத்திரன் தந்தை முன் ஐந்து வயது வரையில் ஒரு சக்கிரவர்த்தி போலவும், அதன்பின் பூரணமாக விவகார தசை வருமட்டும் அடிமையைப் போலவும் அதற்குமேல் தோழனைப் போலவும் நடத்தப்பட வேண்டுமென்பதே ஆன்றோர் விதி. ஐந்து வயது வரையில் புத்திரனுக்கு நாம் எப்படி நடத்துகிறோமென்பது தெரியாது. அதற்கு மேல் செல்வம் காட்டினல் அச்சம் இல்லாமற் போம். அச்சம் பயம் இருந்தாலன்றிப் பிள்ளைகள் தங்கள் கல்வி,

நடவடிக்கை முதலிய விஷயங்களில் தவறின்றி நடக்க மாட்டார்கள். இந்த விதிக்கு மாருகப் பெற்ருேரின் அறியாமையால் செல்லங்காட்டி வளர்க்கப்படும் பிள்ளைகள் சீரழிந்து பிறகு தங்கள் பெற்ருேரையே மதிக்காமல் போக்கிரிகளாகிப் பிற்காலத்தில் தாங்களும் சீரடையாமற் போவதை யனுபவமாகக் காணலாம்.

மார்க்கசேனனிடம் தன் புத்திரனுக்குக் கல்வி கற்பிப்பதற்கு அவசியமான புத்தகங்களும் மற்ற உபகரணங்களும் போதுமான வரையிலிருந்தன. ஆகையால் அவன் கிரமமாகவும், திட்டமாகவும், ஒழுங்காகவும், கண்டிப்பாகவும் தன் புத்திரனுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டு வந்தான்.

இவ்வாறு மார்க்கசேனன் தன் புத்திரனுக்குக் கல்வி கற்பித்துக்கொண் டிருக்கையில், தேச சரித்திரங்களைப் பற்றிப் போதிக்கும் போது திடீலென்று அவன் மனதில் ஒருவித இருள் மூடிக்கொள்ளும். அப்போது அவன் மிக்க சோர்வடைந்து எழுந்து போய்விடுவான். சில சமயங்களில் அத்தகைய சோர்வு உண்டாகும்போது தன் இரகசிய அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு சிந்தனையிலிருப்பான். சில சமயங்களில் அப்படியே மூன்று நான்கு நாட்கள் கூட விருப்பான்-அக்காலங்களில் மிக்க அற்ப உணவே புசிப்பான்-தன் சொந்தப் புத்திரனைக் கூட அந்த அறைக்குள் விடமாட்டான்.

முருகப்பனுக்கு வயது ஏறஏற அவன் தன் தந்தைக்கு அத்தகைய மனச்சோர்வை யுண்டாக்கும் சமயம் நேரும் போதெல்லாம் அது அதிகமாகா வண்ணம் தக்க ஏற்பாடுகளைச் செய்யத் தன்னுல் கூடிய எச்சரிக்கை யனைத்தும் எடுத்துக்கொள்ளலானுன். போகப்போக இன்னெரு விஷயம் அவனுக்குப் புலப்பட்டது. அதாவது, தன்

தந்தைக்கு அத்தகைய மனச்சோர்வு நேரிட்டிருக்கும் காலங்களில், அது பூரணமாக நீங்குமுன் தான் அவர் கண்களுக்குப் புலப்பட்டால் அவருடைய மனச்சோர்வு மிக்க அதிகமாய் விடுகிறது. அதற்குக் காரணம் என்னவென்று அவனுக்குப் புலப்படவில்லை.

மார்க்கசேனன் நடக்கைகள் மிக்க அபூர்வமான விதமாக மாறிவிட்டன. மாரிகாலத்தில் எவரும் வெளிச் செல்லாமல் வீட்டிற்குள்ளாகவே கேளிக்கையாகக் காலத்தைக் கழிக்கும்போது, அவன் ஒரு நெடுஞ் சட்டையணிந்து தனியாகவே வெட்ட வெளிகளிலும் கடற்கரையிலும் ஏதோ இருள் நிறைந்த சிந்தனையோடு திரிந்துகொண்டிருப்பான். ஆகையால் முருகப்பன் தன் தந்தைக்கு அத்தகைய மனப்பேதம் நேரிட்டிருக்கிறதென்றுணர்ந்ததே, அவருடைய உணவு முதலிய சௌகரியங்களுக்கு வேண்டிய யாவற்றையும் ஆயத்தம் செய்து, யாவும் குறைவற நடக்குமாறு ஏற்பாடு செய்துவிட்டுத் தன் மாளிகையை விட்டுப் போய்விடுவான்.

முருகப்பனோ வாலிபன்-அந்த வயதில் தன்னொத்த வாலிபர்களோடு கூடிக்கொண்டு பல விதமான விளையாட்டுகளிலும் கேளிக்கைகளிலும் காலங்கழிக்க விரும்புவது சுபாவம். ஆகையால் தன் தந்தைக்கு நேர்ந்திருக்கும் அசௌக்கியத்தைப்பற்றி அவன் சஞ்சலமடைந்தாலும், நாம் நமது பிரியப்படி உல்லாசமாக இருக்க இச்சம்பவம் அனுகூலமானதே என்று கருதினன்-தன் தந்தையோ அத்தகைய காலங்களில் தன்னைப்பற்றிக் கவனிக்கவே மாட்டான் என்று அவன் நன்ருக அறிவான். ஆகையால் அத்தகைய சமையங்கள், சில நாட்களல்ல, சில வாரங்கள் கூட அவன் ஜலபுரத்தையே விட்டு அன்னிய ஸ்தலங்களுக்குச் சென்றிருப்பது வழக்கமாகிவிட்டது.

முருகப்பன் தைரியமும், துணிகரமும், உற்சாகமுமான நடக்கைகளில் மிக்க பிரியமுடையவன். அவன் அங்குள்ள வாலிபர்களோடு சேர்ந்து ஆபத்தை யுண்டாக்கத் தக்க விளையாட்டுகளில் காலங்கழிப்பதோடு, நடு இரவில் கடலோரத்திலுள்ள செங்குத்தான பாறைகளின்மேலேறி அங்கு கூண்டு கட்டியிருக்கும் கடற்பட்சிகளின் முட்டைகளையும் குஞ்சுகளையும் கொள்ளையடித்து வருவான். அந்தக் காரியம் மிக்க அபாயத்தை யுண்டாக்கத்தக்கது. அப் பாறைகளின் மேல் ஏறிச்செல்லும் போது கால் கொஞ்சம் தவறி யல்லது வழுக்கிவிட்டால் கீழே வீழ்ந்து மண்டையுடைந்து மூளை சிதறி மடியவேண்டியதே முடிவு.

அத்தகைய காரியங்களைச் செய்யும்போது அவன் காட்டும் தைரியமும், துணிகரமும், சாமார்த்தியமும் மெச்சத்தக்கவைகளே-அத்தீவிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்து சிறு வயதிலிருந்து யாவற்றிலும் பழக்கப்பட்ட பிள்ளைகள் கூட அவனைப் போல் சாமார்த்தியமாகவும் தைரியமாகவும் நடந்துகொள்ள மாட்டார்கள். "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்ற பழமொழி போல், முருகப்பனுடைய நடக்கையையும் குணத்தையும் ஒருவாறு நாம் இவற்றிலிருந்தே யூகித்துக் கொள்ளலாகும். மற்ற விளையாட்டுகளில்லாத போது முருகப்பன் மீன் பிடிக்கும் இரங்கனோடு கூடிக்கொண்டு மீன் பிடிக்கும் படகுகளிலேறிக் கடலில் நெடுந்தூரம் செல்வான். அச்சமயங்களில் அவனுக்கு மீன் பிடிக்கும் தொழிலில் நாட்டமில்லை. ஆனால் எத்தகைய காற்றடிக்கும் போதும்—பயங்கரமான புயற்காற்றடிக்கும் போதும், மிக்க ஆழமான கடலிலும், பயங்கரமாய் அலைகள் மலை யுயரம் கிளம்பும்போதும் படகைச் சாமார்த்தியமாகச் செலுத்தும் வித்தையைக் கற்றுக்

கொள்வதிலேயே அவனுக்கு நாட்டமும் உற்சாகமும் அதிகமாக விருந்தன.

அக்காலத்தில் வடநாட்டுப் பூர்வ வீரர்களின் சரித்திரங்கள் அடிக்கடி நாடகமாக அங்கு நடத்தப்பட்டுவந்தன. அச்சரித்திரங்களில், அவ்வீரர்கள் கடலில் செய்த துணிகரமான யுத்தங்களும், ஒரு கூட்டத்தின் தலைவன் மற்றொரு கூட்டத்தின் தலைவனோடு யுத்தம் புரிவதும், அவன் புத்திரியைக் களவாடிக் கொண்டுபோய்க் கடலில் ஒரு கப்பலில் மறைத்து வைப்பதும், அப்பெண்ணின் தந்தை யவளை மீட்கவந்து கடற்போர் நடப்பதும் ஆகிய இத்தகைய துணிகரமான சம்பவங்களே யதிகமாக விருக்கும். முருகப்பனுக்கு இவற்றில் மிக்க பிரியம். அவன் மனம் அத்தகைய விஷயங்களை மிக்க சந்தோஷத்தோடு பற்றத் தொடங்கியபடியால் அவன் மிக்க உற்சாகத்தோடு அந்த நாடகங்களைப் போய்ப்பார்த்து வருவானாயினான்.

மூட நம்பிக்கை கொள்வதில் அத்தீவார் முதல்தரமானவர்கள், கடலில் பலவிடங்களில் பேய்கள், பூதங்கள், ஆவேசங்கள் இருப்பதாகவும், அவைகள் ஒவ்வொரு சமயம் முதலில் ஒரு மேகக்கூட்டம் போல் தோன்றிப் பிறகு ஒரு பெரியகப்பலாக மாறிவிடு மென்றும், தங்கள் கப்பல் சமீபத்தில் செல்லும்போது அந்தப் பேய்க்கப்பல் திடீலென்று முழுகி, முழுகும் வேகத்தால் தங்கள் கப்பலைக் கடலுக்குள் இழுத்துக்கொள்ளும் என்றும் அவர்கள் நம்பினார்கள். இத்தகைய நம்பிக்கைகள் அநேகம் அவர்களிடமுண்டு. முருகப்பனுக்கு இவற்றைக் கேட்பதில் மிக்க அக்கரையும் உற்சாகமு முண்டு.

அத்தீவார் வெய்யில் காலத்தில் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை வைத்துக்கொண்டு மாரிக்காலத்தில் கேளிக்கையாய் வீட்டிற்குள்ளாகவே காலத்தைக் கழிப்

பார்கள். அப்போது அவர்களுக்குள் பலவிதமான விளை யாட்டுகள் நிகழும்; அவர்கள், கத்திப்போர், கோழிச்சண் டை, மல்யுத்தம், ஓட்டப்பந்தயம், படகுப்பந்தயம், சங்கீ தம் முதலிய வழிகளில் காலத்தை வேடிக்கையாகக் கழிப் பார்கள். முருகப்பன் வயது ஏறவேற அந்த வித்தைகளி லெல்லாம் நல்ல தேர்ச்சி யடைந்துவிட்டான். அதனால் அவன் யார்வீட்டிற்குச் சென்றாலும் மிக்க சந்தோஷத் தோடு வரவேற்கப் பட்டான். அவன் யார் வீட்டிற்குச் சென்றாலும் சந்தோஷமாய் எத்தனை நாட்கள் வேண்டு மாயினும் இருக்கலாகும். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடம் செல்வதற்குப் படகு வசதியா யில்லாவிட்டால் அத் தீவில் குதிரைகள் ஏராளமாக விருக்கின்றன.

சங்கீதத்தில் முருகப்பன் தாழ்ந்தவனல்ல; வீணை, பிடில், புள்ளாங்குழல் முதலிய எல்லாவற்றையும் வாசிப் பான். ஒரு கூட்டத்தார் கடலில் மீன்வேட்டைக்குச் சென் றாலும் சரி, கரையில் மிருகவேட்டைக்குச் சென்றாலும்சரி, தோட்டக் கச்சேரி, விருந்து, சங்கீதக்கச்சேரி, கத்திவிளை யாட்டு எது நடத்தினாலும் சரி, அங்கு முருகப்பன் யாவர்க் கும் களிப்பையும் உற்சாகத்தையும் உண்டாக்கும் மூலக் கருவியாகக் கருதப்பட்டான். இவனும் இவன் கூட்டமும் செல்லுமிட மெல்லாம் சந்தோஷமே; இவர்கள் விட்டு நீங்குமிடமெல்லாம் துயரமே.

இவ்வாறு இவன் அத்தீவிலுள்ள செல்வவந்தர்கள், செல்வாக் குடையவர்கள் எல்லார் வீடுகளுக்கும் விருந் தாளியாகச் சென்றுகொண் டிருந்தான். இவன் தந்தைக்கு நாம் முன் கூறியபடி மனச்சோர்வு உண்டாகும் காலங்க ளில் இவன் தன் பிரியப்படி இவ்வித விஷயங்களில் காலத் தைக்கழிக்க மிக்க அனுகூலமாக விருந்தது. முருகப்பன்

இவ்வாறு விருந்தினனாகச் செல்லும் வீடுகளில் அத்தீவின் முதலாளியாகிய தைரியநாதன் வீடும் ஒன்றாகும்.

முருகப்பன் தன் தந்தையோடு அங்குவந்தது முதலே அவர் வீட்டில் வசித்துக்கொண் டிருந்தான். அவர் இவன் தந்தைக்கு நண்பராய் விட்டார். இவனைக் காணும்போ தெல்லாம் அவருக்கு மிக்க சந்தோஷமாதலின் இவனை மிக்க அன்போடு வரவேற்றுக்கொண் டிருந்தார்.

4-வது அத்தியாயம்.

முருகப்பன் தைரியநாதர் வீட்டிற்கு அடிக்கடி சென்றுகொண் டிருந்தான். அப்படி யவன் சென்றதற்குத் தைரியநாதர் அன்பான வரவேற்பு மட்டும் காரணமல்ல. ஒரு வாலிபன் மனதை வலைபோட்டிழுக்கத் தக்க வலியமருந்து வேறொன்றும் அங்கிருந்தது. தைரிய நாதருக்கு இரண்டு பெண்கள் இருக்கிறார்களென்று முன்னமே கூறியிருக்கிறோம். அவர்களில் மூத்தவளான மீனாக்ஷி, அல்லது அவள் சாதாரணமாக அழைக்கப்படு கிறபடி மீனாள் என்பவளுக்குப் பதினெட்டுவயதே. இளையவளாகிய புனிதவதி அல்லது புனிதம் என்பவளுக்குப் பதினேழுவயதே. அவர்களின் தாயார் சிலவருடங்களுக்கு முன்பே காலஞ்சென்று விட்டாள்.

அவர்களின் தந்தை முதிர்ந்த வயதில் தன் குடும்ப இன்பத்திற்கு அவர்களையே ஆதாரமாகக் கருதியிருந்தார். அவர்கள்மேல் வைத்த அன்பினாலேயே யவர் மறுபடி மணம் செய்துகொள்ள விரும்பவில்லை. புத்திரிகளும் தங்கள் தந்தைமேல் பூரண அன்புவைத்து நடந்து வந்தார்கள். அவர்களுக்குத் தாயின் அன்பு தெரியாததால் அவர்கள் பூரண அன்பையும் தந்தையின் மீதே வைத்திருந்தார்

கள். அவர்கள் வனப்பிலும் குணங்களிலும் ஒன்றுக்கொன்று மாறுன வித்தியாசமிருந்தாலும் குடும்ப சம்பந்தமான விஷயங்களில் ஒருவித அதிசயமான ஒற்றுமை அவர்களிடம் இருந்தது. ஒரே தாய் தந்தையர்களுக்குப் பிறந்த மக்களில் சில விஷயங்களில் இத்தகைய ஒற்றுமையிருப்பது இயற்கையே.

இப்பெண்களின் தாயார் மலை நாட்டைச் சேர்ந்த ஒரு சீமான் புத்திரி. அங்கு உள் நாட்டுக் கலகம் நேர்ந்தபோது அக்குடும்பம் அங்கிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு இத்தீவில் வந்து அடைக்கலம் புகுந்தது. இங்கு அவர்கள் தங்கள் முன் நிலைமையை நோக்கத் தரித்திரத்திலும் கஷ்டதசையிலுமே யிருந்தாலும் மனக்கிலேசமும், பிராணபத்துமின்றி நிம்மதியாய் இந்தார்கள்.

அக்குடும்பத்தலைவன் தன் பூஸ்திதியையும் தன் ஜனங்களுக்குத் தலைவனுகவிருந்த பதவியையும் அதிகாரத்தையும் யாவற்றையும் அடியோடிழந்துவிட்ட துயரத்தால் மனோவியாதியடைந்து சத்தத் தீவிற்குவந்த கொஞ்சநாட்களுக்குள் மரித்தான். அப்பெண் தன் தந்தையையிழந்து விட்டுத் தரித்திர நிலைமையிலிருந்தபோதிலும் அவளுடைய பேரழகு தைரியநாதரின் மனதைக் கவர்ந்துகொண்டது. இயற்கையாய் அன்னிய நாட்டார்மேல் விருப்பம் வைக்காத அவர் சுபாவம் அந்த விஷயத்தில் மட்டும் மாறிவிட்டது. அவர் அவள்மேல் காதல்கொண்டு தன் காதலையவளுக் கறிவித்தார். வினைப் பயன்படி அக்கன்னிகையும் அவர்மேல் விருப்பம் வைத்து அவரை மணம் புரிய உடன் பட்டாள். இருவரும் சந்தோஷமாய் மணம் புரிந்துகொண்டார்கள். ஆனால் மேற்கண்ட இரண்டு பெண்களையும் ஈன்று மணம் நடந்த ஐந்தாமாண்டு அப்

பெண்களின் தாயார் தன்மேல் பூரண அன்புடைய கணவரையும் தன் இரு அருமை மக்களையும் துக்க சாகரத்தில் அமிழ்த்திவிட்டுப் பரலோகப் பிராப்தியடைந்தாள். தைரியநாதர் முதலில் இதனுலுண்டான துயரைச் சகிக்க முடியாமல் தைரியத்தை யிழந்து துயர்க் கடலில் அமிழ்ந்து விட்டார்.

ஆனல் இந்த அண்டரண்ட சராசரங்களையும் ஆக்கி யளித்தழிக்கும் அற்புத குணமுடைய பகவானின் அதிசயிக்கத்தக்க சமர்த்துகள் பலவற்றுள் ஒன்றிருக்கிறது. அஃதின்றேல் பெரும்பாலோர் உயிர்தரித்திரார்கள். அது எதுவெனில் ஒருவருக் குண்டாகும் எத்தகைய துயரமும் நீடித்து நிலைக்காமல் தணிந்து போவதேயாகும். ஒருவனுக்குத் தன் பத்துப் பனிரண்டாவது வயதில் தன் தாய் தந்தையர்மே லிருக்கும் அன்பும் பற்றும் அளவுகடந்தவை. அப்போது தன்தாய் இறந்து போவதாயின் தானும் மடிந்துபோக வேண்டியதே யென்று அவன் கருதுவான். ஒருவன் தன் முதிர்ந்தவயதில், அதாவது இனி நமக்குப் புத்திர சந்தான முண்டாகாது என்று தீர்மானித்துவிட்ட காலத்தில் தனக்கிருக்கும் ஏகபுத்திரன் இறந்துவிடின் அவனை யருகிலிருப்போர் பிடித்துக் கொள்ளாவிட்டால் அவன் உடனே அருகிலிருக்கும் சுவரில் தலையை மோதிக் கொண்டேனும் பிராணத்தியாகம் செய்து கொள்வான்.

ஆனல் இத்தகைய துயரமனைத்தும் நாளேற வேறக் குறைந்து கடைசியில் ஒருவாறு மறந்துவிடும்படி பகவான் சூழ்ச்சி செய்திருக்கிறுன். அவனுடைய இச்சாமார்த்தியம் அளவிடற் கரியது. அதை யென்னென்று புகழ்வது. மேற்கண்ட விஷயத்தை நாம் சாதாரணமாக உலக அனுபவத்தில் காணலாம். அவ்வாறே தைரியநாதரும் தமது அருமை மனைவியின் பிரிவாலுண்டான துய

ரத்தை யொருவாறு மறந்து, அந்த அன்பைத் தமது புத்திரிகளிடத்தில் வைத்து அவர்களை மிக்க அருமையாய் வளர்த்து வந்தார்.

மீனுள் தன் தாயைப்போலவே கம்பீரமான தோற்றமுடைய உருவமும், வண்டைப்போல் கறுத்த நயனங்களும், மன்மதன் வில்லைப்போன்ற புருவங்களும் உடையவளாக வீருந்தாள். அவள் கூந்தலும் கறுத்துச் செழித்து வளர்ந்திருந்தது. அவள் எப்போதேனும் ஒருவருடைய துன்பத்தைப் பற்றியாவது, ஒருவர் ஆபத்தில் சிக்கிக்கஷ்டப்பட்டதையாவது கேட்டால் அவள் மனம் மிக்க வேதனை யடையும். அச்சங்கதியைக் கேட்டதும் அவள் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறிவிடும். அவள் சாதாரணமாய் அடக்கமும் ஆழ்ந்தசிந்தனையும் சாந்தமும் உடையவள். சுருக்கமாகக் கூறும் பட்சத்தில் அவள் இதைவிட மேலான உலகத்தில் இருக்க வேண்டியவள் என்று கூறலாகும். ஏனெனில் அவள் நடையுடை முதவிய யாவும் அத்தன்மை யுடையவைகளாக விருந்தன. அவள் எப்போதும் சாந்தகுணமும், இனிமையான வார்த்தையும், பொறுமையும், ஏழைகளிடமும் கஷ்டப்படுவோரிடமும் இரக்கமும், தயாள குணமும் உடையவள். தன் வசீகரமான பார்வையையும், இனிய குணங்களையும் உணராதவள். அதாவது நாம் யாவர்மனதையும் கவரத்தக்க அழகிய தோற்றமும், நல்ல குணங்களும் உடையோம் என்று கருதிப் பெருமைகொள்ளாதவள். தந்தை யத்தீவிற்குத் தலைவராக விருக்கிறார், அதனால் நமக்கு யாவரைக் காட்டிலும் அதிக செல்வாக் கிருக்கிறது என்ற எண்ணமே யவளிடமில்லை.

மீனுளின் தங்கையாகிய புனிதவதி அல்லது புனிதம் என்பவள் அழகில் அவ்வளவாகத் தன் தமக்கைக்குப்

பின் வாங்கியவளல்ல. ஆனால் நிறத்திலும், நடக்கையிலும், அபிப்பிராயங்களிலும், உணர்ச்சிகளிலும் மாறுபாடுடைய வளே. அவள் கூந்தல் சிவந்த நிறமுடையதாதலால் மாலைச் சூரியனது குளிர்ந்த கிரணங்கள் அதன்மேல் தாக்கும் போது அது பளபளப்பான பொன்னிறமாக விருக்கும். இவள் தன் தமக்கையை விடச் சற்று குட்டையாயினும் இலட்சணமாக அமைக்கப்பட்ட அவயவங்களையுடையவள்.

இப்போது நாம் இந்த இரண்டு சகோதரிகளிடத்தி லும் இருக்கும் வித்தியாசத்தைச் சற்று வெளியிட வேண்டி யது நமது கதைக்கு அவசியமாக விருக்கிறது. ஆனால் இவர்களின் தேக அமைப்பு அழகு இவற்றிலுள்ள வித்தியா சங்களை நாம் முக்கியமாகக் கருதவில்லை யாதலின், இவர் களின் குணம் நடக்கைகள் இவற்றிலுள்ள வித்தியாசங் களில் நமது கதைக்கு அவசியமானவற்றை மட்டும் நாம் கூறுகிறோம்.

புனிதம் எப்போதும் கேளிக்கையாகவும் சந்தோஷ மாகவுமே யிருக்கப் பிரியமுடையவள். அடக்கமுடைய வளே யெனினும், தான் தனியாய் அனுபவிக்கும் சிந்தனை யிலும் சந்தோஷத்தையும் மனக்கிளர்ச்சியையுமே முக்கிய நாட்டமாகக் கொள்பவள். உண்மையில் களங்கமற்ற மனமுடையவளே யாயினும், உலகபோக சம்பந்தமான இன்பங்களில் சந்தோஷத்தை யெதிர்பார்க்கும் குண முடையவள். நூல்களை வாசிப்பதாலடையும் இன்பம் இத் தகையதென அவளுக்குத் தெரியாது. அக்காலத்தில் அத் தீவில் அத்தகைய விஷயங்களுக்குச் சற்றும் வசதியுமில்லை. தைரியநாதர் சுபாவத்தை நோக்க அவர் வீட்டில் அத் தகைய விஷயங்களுக்கு இடமேயில்லை யென்றுணரலாம்.

ஆனால் மீனளுக்கோ உலகத்தின் இயற்கையமைப்பே ஒரு பெரிய நூலாகத் தோன்றியது. அங்கிருக்கும் வெளி

களும், கானுறுகளும், பள்ளத்தாக்குகளும், பாறைகளும், கடற்கரையிலுள்ள சங்குகளும், பலவகைப் பட்சிகளும் ஆகிய யாவும் அவளுக்குப் புது புது ஞானத்தை யளிக்கும் பலவகைப்பட்ட சாத்திரங்களாகத் தோன்றின. அவள் விஷயங்களை யுணரும் சூக்கும புத்தி மிக்க அதிசயமானதே. அவள் கண்டும் கேட்டும் அறிந்த விஷயங்களாலுண்டான ஞானத்தை மறவாமல் மனதில் சேகரித்து வைத்துக்கொள்ளும் வல்லமையுடையவள். அவள் இயற்கைக் காட்சிகளின் உண்மையை யறிந்து அனுபவிப்பதில் மிக்க விருப்பமுடையவள்.

இந்த இரண்டு சகோதரிகளும் அத்தீவிலுள்ளவர்களால் மிக்க பிரியமாக நடத்தப்படுகிறவர்கள். யாவரும் இவர்களை யன்போடு வரவேற்பது வழக்கமாய் விட்டது. அத்தீவில் வந்த ஒரு கவிவாணன்கூட அந்த இரண்டு சகோதரிகளின் அழகையும் குணங்களையும் புகழ்ந்து இரவிற்கும் பகலுக்கும் ஒப்பிட்டு வர்ணித்துக் கவிபாடியிருக்கிறுன் என்றுல் அவர்கள் புகழ்ச்சியைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. அவர்களின் தந்தை இருவரையும் அன்போடு நேசித்துவந்தார். அவர் யாரை யதிகமாய் நேசிக்கிறுர் யாரைக் குறைவாக நேசிக்கிறுர் என்று கூற முடியாது. அவர் வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது மீனுளை யழைத்துச் செல்லவும், வீட்டில் நிம்மதியாயிருக்கும்போது புனிதாளிடம் சம்பாஷிக்கவும் விரும்புவர். அவ்வளவேயன்றி வேறு எவ்விஷயத்திலேனும் அவர் தமது புத்திரிகளிடம் பாரபட்சமான அன்பு வைத்திருந்தார் என்று கூறமுடியாது.

இக்குடும்பத்திற்கு அப்போதைக் கப்போது வரும் முருகப்பனுடைய நடக்கை மிகவும் அதிசயமாகவிருந்தது. ஏனெனில் அழகில் ஒருவர்க்கொருவர் இணையில்லா இந்த

இரண்டு சகோதரிகளில் யார்மேல் அவன் அதிக அன்பு வைத்து நடக்கிறான் என்று கண்டறிய முடியவில்லை. அவன் இருவரிடமும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியாய் நடந்துகொண் டிருந்தான். அவன் அங்கு வருவது மட்டும் அக் கன்னிகைகளுக்காகவே யென்று யாவரும் எளிதி லறிந்துகொள்ளலாம். எவ்வாறெனின் தைரியநாதர் வாச ஸ்தலத்திற்கும் ஜலபுரத்திற்கும் குறைந்தது இருபது மைல் தூரம் இருக்கும். வழியோ மிக்க இடரானவழி. எங்கும் பாறைகளான மேடுகளும், பள்ளத்தாக்குகளும், ஓடைக ளும், மிருதுவான சதுப்பு நிலங்களும் நிறைந்தது. ஆங் காங்கு கடற் கழிகள் உள்ளே இடையிடையே நுழைந்து வந்திருக்கும். ஒரு புதுமனிதன் அவ்வழியை யறிந்து செல் வது முடியாத காரியம். இவையன்றி ஆறுகளும், ஏரிகளும் உண்டு. மழைக் காலத்தில் அவ் வழியாய்ச் செல்வது மிக்க பழக்கமானவர்களுக்கும் முடியாதகாரியம். அச்சமையங்க ளில் அவ்வழியே செல்வது மிக்க அபாயமாகும். அவ்வா றிருப்பினும், முருகப்பன் தன் தந்தையின் தேக சௌக்கி யம், தாழ்ந்த நிலைமையிலிருக்கும் சமயங்களில் எப்படியா யினும் இந்த இருபது மயில் தூரத்தையும் கடந்து தைரிய நாதர் வீட்டிற்கு வந்து விடுவான்.

இரண்டு யௌவன கன்னிகைக ளிருக்குமிடத்திற்கு ஒரு யௌவனவாலிபன் அடிக்கடி வந்து அவர்களோடு சிநேகமாயிருந்தால் அவ்வாலிபன் மனதில் காதல் பூண்டு முளைத்திருக்கிறதென்றே யெவரும் கருதுவது சுபாவமே. ஆகையால் சத்ததீவிலுள்ள அனைவரும் முருகப்பன் அந்த இரண்டு கன்னிகைகளில் ஒருத்திமேல் காதல்கொண்டிருக் கிறான் என்றே தீர்மானித்தார்கள். அப்பெண்களில் ஒருத்தியை மணம்புரிபவன் அங்குள்ள பூஸ்திதியில் பாதி யைப்பெறுவான் என்று எல்லோரு மறிவார்கள். இவ்

வளவு சூக்குமமாய் அவர்கள் அறிந்து கொண்டாலும் முக்கியமான விஷயத்தை யறிந்துகொள்ள முடியவில்லை. அதாவது அந்த இரண்டு பெண்களில் யார்மேல் அவ்வாலிபன் அன்புவைத் திருக்கிறான் என்பதுமட்டும் யாருக்கும் தெரியவில்லை. அவன் அந்த இரண்டு சகோதரிகளிடத்திலும் ஒரு சகோதரனைப்போல் அன்போடும் நடந்துகொண் டிருந்தான். அவன் அன்பு எவ்வளவு சமமாக விருந்ததெனில் ஒரு மயிரிழை வித்தியாசமும் பாரபட்சத்தை யுண்டாக்கிவிடும்போ லிருந்தது.

அத்திவார் அவன் இரண்டு கன்னிகைகளில் யார்மேல் அதிக அன்புவைத் திருக்கிறான், யாரைக் காதலிக்கிறான் என்று அறிந்துகொள்ளாவிடினும் இருவரில் ஒருவரை மணம் செய்துகொள்ளப் போகிறான் என்பதைமட்டும் நிச்சயமாய் நம்பிக்கொண்டார்கள். பலர் பலவிதமாய்ப் பேசிக்கொண்டார்கள். ஆனால் எல்லாருமே "இதென்ன இது! எவனோ, எங்கிருந்து வந்தானோ தெரியாது, ஆஸ்தி பாஸ்தி ஒன்றும் இருப்பதாகவும் தெரியவில்லை. இத்தகைய வாலிபன் தன் இரண்டு புத்திரிகளிடமும் சினேகம் பாராட்டிக்கொண் டிருப்பதை நமது முதலாளி பேசாமல் பார்த்துக்கொண் டிருக்கிறார். அவனே இருவரில் ஒருத்தியைத் தேர்ந்து கொள்ளட்டும் என்று விட்டிருக்கிறார் போல் காண்கிறது. நானாக விருந்தால் இரண்டிலொரு உண்மை தெரிந்துகொண்ட பின்பே யினி யவனை வீட்டில் வரவிடுவேன்" என்று அவரவர்கள் இரகசியமாய்ப் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் தைரியநாதரை யதைப்பற்றிக்கேட்க ஒருவர்க்கும் தைரியமில்லை. அவர் ஒருசமயம் "என் குடும்பவிஷயங்களைக் கவனிக்கும்படி யுங்களுக்கு யார் அனுமதி யளித்தார்கள்?" என்று கேட்பார் என்ற அச்சம் அவர்களுக்

குண்டு. அந்த நாட்டாசாரப்படி அதாவது மேல்நாட்டா சாரப்படி அவர்கள் சிந்தித்தது உண்மையே. ஒருவன் தங்கள் பெண்ணை மணம்புரியத் தகுதியுடையவன், அவன் சம்பந்தம் தங்களுக்கு மேலான சம்பந்தம் என்று பெற்றோர்க்குத் தோன்றினல், அவர்கள் பெண்களிடம் அவ் வாலிபன் தாராளமாகப் புழங்கும்படி விட்டு விடுவார்கள். "அவன் நல்ல செல்வவந்தன் புத்திரன், அவன் உனக்குக் கணவனுயமைவது நல்லதிஷ்டம் ஆகையால் அவனுக்குச் சந்தோஷ முண்டாகும்படி நடந்துகொள்" என்று தங்கள் புத்திரிகளுக்குப் போதனையும் செய்வார்கள். தாய்மார் களே இத்தகைய போதனையை வெளிப்படை யாகவும் தாராளமாகவும் தம் புத்திரிகளுக்குச் செய்வார்கள். உலக அனுபவ மறியாத வாலிபக் கன்னிகைகளுக்கு இத்தகைய போதனைசெய்தால் பிறகு அவர்கள் நடவடிக்கை எத்தகைய வழியில் செல்லும் என்பதை யறிவாளிகளே சிந்திக்கலாகும்.

5-வது அத்தியாயம்.

வசந்த காலம் முடிவிற்குவரும் சமயமாய் விட்டது. முருகப்பன் தைரியநாதர் வாசஸ்தலமாகிய வசந்த மாளிகைக்கு வந்து ஒருவாரம் ஆய்விட்டது. ஆகையால் அவன் தன் தந்தையிடம் செல்லவேண்டு மென்று அக் குடும்பத்திலுள்ளவர்களை யனுமதி கேட்டான். அவன் தங்களை விட்டுப்பிரிந்து செல்வது ஒருவர்க்குமே பிரியமில்லை. அதைப்பற்றி ஆக்ஷேபனை செய்தவர்களில் தைரியநாதரே முதன்மையானவர். அவர் "நீ யுடனே யுன் தந்தையைக் காணவேண்டு மென்ற அவசியம் எனக்கு ஒன்றுமே புலப் படவில்லை. அப்படி யுன் தந்தை யுன்னைக் காணவேண்டு

மெனில் இரங்கனுடைய படகுகளில் ஒன்றில் ஏறிக் கொண்டு இங்குவரலாம். வந்தால் உன்னைப் பார்ப்பதோடு அவரைப்பார்க்கப் பிரியமாகவிருக்கும் இன்னும் இருபது பேரை யவர் காணலாம்” என்று கூறினர்.

முருகப்பன் “அப்படியல்ல, முதலாவது நான் அவசியம் உடனே யவரிடம் செல்லவேண்டும். ஏனெனில் அவர் ஒவ்வொருசமயம் மௌனம் சாதிக்கிறர். அத்தகைய வேளைகளில் அவர் அன்னியரோடு சம்பாஷிப்பதற்கு நான் துவிபாஷிகன்போல், அங்கிருக்க வேண்டும். அவர் இங்குவருகிற சங்கதியிருக்கிறதே, அது நடக்கும் சம்பவமல்ல. அவர் வருவதைவிட அதோ தெரிகிறதே அப்பாறை யிங்குபெயர்ந்து சுலபமாக வரலாகும்.” என்ருன்.

தைரியநாதன்:—“அப்பப்பா! அப்பாறை வரவேண்டாம். அத்தகைய விருந்தாளிவந்தால் வீடே யழிந்துவிடும். சரி, நீ இன்று போசனம் செய்து விட்டுச் செல்லலாமல்லவா? இன்று மூன்று நான்கு குடும்பத்தார் விருந்திற்கு வருவார்கள். இன்னும் சிலரும் வருவார்கள். இன்று முன்னமே நம்வீட்டில் முப்பதுபேர் இருக்கிறர்கள். இன்னும் இங்கு அறைகள், படகிருக்கும் இடங்கள், சந்து, பொந்து எங்கெங்கு இடம் கிடைக்குமோ அங்கெல்லாம் ஆட்கள் நிரம்பிவிடுவார்கள். இந்த ஆடம்பரங்களை யெல்லாம் விட்டுவிட்டா நீ போகப்போகிறுய்?” என்ருர்.

புனிதம்:—“அதுமட்டுமல்ல. பக்கத்துத் தீவிலிருந்து நடனம்செய்வதில் கைதேர்ந்தவர்க ளென்று கருதப்பட்ட இரண்டு வாலிபர்கள் வருகிறர்கள். நீர் இருந்தால் அவர்களுக்கு ஈடாக விருக்கும். இங்குவேறு

யாரும் அவர்களோடு சரியாய்ப் போட்டிசெய்கிறவர் களில்லை " என்றாள்.

முருகப்பன்:—புனிதம்! இத்தீவில் இன்னும் அனேகர் நன்றாக நடனம் செய்யத்தக்கவர்க ளிருக்கிறார்கள். அத்தகையோர் இருக்குமட்டும் உனக்கு எப்போதும் முதல்தரமான ஜதையகப்படாமற் போகாது. நான் இன்று இந்தப் பாறைகளையும், வெளிகளையும் நடனத்தால் கடந்துசெல்ல வேண்டியதாக விருக்கிறது. அது என்கடமையாக விருக்கிறது " என்றான்.

மீனாள்:—தாங்கள் அம்மாதிரி கூறவேண்டாம். அப்படிச் செல்லப் பிரியமிருந்தாலும் இன்று செல்லவேண்டாம்.

முரு:—"ஏன் இன்று செல்லக் கூடாது?" என்று நகைத்துக்கொண்டே கேட்டான்.

மீனாள்:—ஏனெனில், இன்று காலை முதல் மூடுபனி தீவுகளின்மேல் கப்பிக்கொண் டிருக்கிறது. பொழுது விடிந்தது முதல் மேற்குக்குன்று கண்களுக்குப் புலப்படவேயில்லை. பட்சிகளெல்லாம் கடற்கரையை விட்டு உள் நாட்டை நோக்கி யோடிக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலும் கடலிலேயே வசிக்கும் பட்சிகளுங்கூடக் கரையை நோக்கிப் பறந்து வருவதைப் பாரும்.

தைரிய:—இச்சம்பவங்களனைத்தும் புயற் காற்றடிக்கப் போகிறது என்று காட்டுகின்றன.

மீனாள்:—ஆகையால் நீர் இங்கேயே எங்களிடம் தங்கியிரும். இங்கு அடிக்கும் புயற்காற்றுகள் மிக்க பயங்கரமானவை. அப்புயற்காற்றைப் பார்த்தால் மிக்க கம்பீரமாக விருக்கும். இதோ பாரும் காற்று அடக்கமாயிருக்கிறது. புழுக்கமாயிருக்கிறது. பேசாமல்

இங்கேயே தங்கிவிடும். ஏனெனில் புயற்காற்று மிக்க பயங்கரமாயடிக்கும்.

முரு:—நீ கூறுவது உண்மையாகவே யிருக்கும் பட்சத்தில் நான் மிகத்துரிதமாய் இங்கிருந்து புறப்படவேண்டியதே. அதுதான் சரியானகாரியம். அப்படி வழியில் புயற்காற்று அதிக மும்முரமாயடித்தால் நான் சோரனூரில் தங்கியிருப்பேன்.

தைரிய:—என்ன? அவனிடமா போகிறாய்? அவன் இத்தீவாருக்கு ஏதேதோ புது வழி காட்டப்போகிறானாம்.

முரு:—இல்லை இல்லை. அவனிடம் இருக்கும் புதுக் கருவிகளைக் காண விரும்புகிறேன்.

தைரிய:—"இத்தீவிலிருக்கும் இரும்புக் கலப்பைகளைவிட மேற்பட்ட கருவிகளையா அவன் செய்யப்போகிறான்" என்றார்.

வாலிபன் அவருக்குச் சோரனூரிலிருக்கும் ஆள் விஷயத்தில் விருப்பமில்லை யென்று அறிந்ததால், "இப்போதிருக்கும் வானக்குறிகள் வெறும் காற்றை மாத்திரம் உண்டாக்கினால் நான் சோரனூரில் தங்கவே மாட்டேன். ஆனால் மழைபலமாகப் பெய்யும் பட்சத்தில் அடியோடு நனைய எனக்குச் சரிப்படாது" என்றான்.

மீனாள் "இப்போதிருக்கும் குறிகளை நோக்க மழை வருவதோடும் மட்டும் நிற்காது. ஒவ்வொரு விநாடியும் கரிய மேகங்கள் எவ்வளவு தடிப்பாய் ஏறுகின்றன பாரும். புழுக்கம் வரவர எவ்வளவு அதிகமாக ஆகிறது பாரும்" என்றாள்.

முரு:—"நான் யாவற்றையுமே பார்க்கிறேன். இவற்றால் நான் அறிகிற தென்னவெனில் இனியொரு விநாடி கூட நான் ஆலசியம் செய்யலாகா தென்பதே. எவ்

வளவு துரிதமாகப் புறப்படுகிறேனே அவ்வளவு துரிதமாகப் புயற்காற்றுக்கும் மழைக்கும் தப்பித்துக் கொள்ளலாகும். இனி இங்கு நிற்க அவகாசமில்லை. மீனுள்! போய்வருகிறேன். புனிதம்! விடைபெற்றுக் கொள்கிறேன். நல்ல நடனம் நடக்கும்போது நீங்கள் இருவரும் என்னை மறக்கவேண்டாம்'' என்ருன்.

அவன் கூறியதைக்கேட்ட இரண்டு சகோதரிகளும் ஒரேவாக்காய் "தாங்கள் கண்டிப்பாய் போவேன் என்கிறவரையில் பாதையில் மிக்க ஜாக்கிரதையாகக் கவனித்துச் செல்லுங்கள்'' என்ருர்கள்.

தைரியநாதர் "ஒரு தைரியசாலியாகிய வாலிபனுக்குப் பாதையில் பீதியுண்டாகும் என்று கூட எங்கேனும் கூறலாகுமோ'' என்று தம் மக்களைக் கண்டித்து விட்டுத் தாம்மட்டும் முருகப்பனை நோக்கி, "நீ எதற்கும் இரவு இங்கு தங்கியிருந்து செல்வதே நலமென்று எனக்குத் தோன்றுகிறது. அப்படிப் போவதாயின் இவ்வழி மிக்க அபாயகரமானதாதலின் அதிக ஜாக்கிரதையாய்ச் செல்லவேண்டும். ஒரு சமயம் காற்று மழை வந்து விட்டால் பேசாமல் சோரனூரில் தங்கிவிடு'' என்று புத்தி கூறினர்.

சற்று நேரம் சிந்தித்து மறுபடி வாலிபனை நோக்கி "ஒன்று மட்டும் கூறுகிறேன். உங்கள் தேசத்தில் தெருக்கதவிற்குத் தாழ்ப்பாளென்றும் பூட்டென்றும் இருக்கின்றன. ஆனல் எங்கள் தீவில் அத்தகைய சங்கதிகள் ஒன்றுமே கிடையாது. எத்தகைய காற்று மழையாயிருந்தாலும் எந்தநேரத்திலும் அதிதிகளுக்குக் கதவுதிறந்தேயிருக்கும். இனி நீ போவதாய்த் துணிந்திருக்கிற வரையில் போகவேண்டியதே. கொஞ்சம் ஒயின் அருந்திப்போ. கொஞ்சம் சாராயமும் அருந்தலாம். ஆனல் வாலிபர்கள் போஜனத்திற்கு முன் சாராயம் அருந்தலாகாது. ஆகை

யால் உன் சுகத்திற்காக நான் அருந்துகிறேன்'' என்று ஒரு கிண்ணத்தில் சாராயம் விட்டுத் திருப்தியாய் அருந்தினர். கடைசியில் யாவரும் முருகப்பனுக்கு விடைகொடுத்தனுப்பினார்கள். கடைசியில் முருகப்பன் தைரியத்தோடு அங்கிருந்து புறப்பட்டான்.

முருகப்பன் தன் வழியே மூன்றுமணி நேரம் செல்வதற்குள் மீனுள் குறிபோற் கூறிய சங்கதிகள் யாவும் அப்படியே பலிக்கத்தொடங்கின. முதலில் முன்பு அசையாமல் புழுக்கத்தை யுண்டாக்கிக் கொண்டிருந்த வானத்தில் மெதுவாய்ச் சலிப்புண்டாகத் தொடங்கியது. நமக்குத் துயரம் உண்டாகும் என்று கருதுகிறவர்கள் முணமுணவென்று துக்கிப்பதுபோல் காற்று ஒருவித சத்தத்தோடு வீசத்தொடங்கிற்று. பிறகு போகப்போக மும்முரமான மாதிரியாய் அடிக்கத்தொடங்கியது. வரவரக் கொஞ்சங் கொஞ்சமாய் விர்த்தியடைந்து மிக்க பயங்கரமான விதமாய் வீசத்தொடங்கியது. அதோடு மழையும் ஆலாங்கட்டிகளும் சொரியத் தொடங்கின. அச்சமயம் முருகப்பன் குன்றுகளுக்கும், பாறைகளுக்கும் இடையிலுள்ள பாதைகளில் சென்று கொண்டிருக்கிறான். அக்குன்றுகளின்மேலும் பாறைகளின்மேலும் கல்மழை பொழிவது அவற்றைப் பிளந்து விடுவது போல் பயங்கரமாக விருந்தது. அவன் எவ்வளவு ஜாக்கிரதையாகச் சென்றாலும் இப்போது இன்ன வழியில் செல்கிறோம் என்று அவன் உணராதபடி அவன் புத்தி கலக்கமடைந்து விட நேர்ந்தது. அதனால் ஒரு செப்பனிட்ட பாதையாவது தேய்ந்த பாட்டையாவது இல்லாததும், இடையிடையில் கடற்கழிகளும், காட்டாறுகளும் இருப்பதுமாகிய வழியில் ஒருவனுக்கு வழிதவறிவிட்டால் அவன் கதி யென்னகும்? இப்போது புயற்காற்றடிப்பதால் வழியிலுள்ள கழிகள்

ஆறுகள் குட்டைகளிலுள்ள ஜலம் அனைத்தும் பொங்கிப் பயங்கரமாய்க் கொந்தளிக்கத் தொடங்கின. மழைத்துளிகளும் ஆலாங்கட்டிகளும் முருகப்பன் முகத்தில் வேகத்தோடு தாக்கின.

முருகப்பன் அத்தகைய காற்று மழைகளில் மிக்க பழக்க முடையவன் போலும், தன் தைரியத்தையும் ஆண்மையையும் இந்த விஷயத்தில் காட்டக் கருதியவன் போலும் மிக்க துணிகரத்தோடு யாவற்றையும் எதிர்த்துச் செல்லத் தொடங்கினன். அவன் தேகம் பூராவும் நனைந்து விட்டது. இன்னொருவனுயில் வழி தெரியாமல் நேர்ந்த தடுமாற்றத்தால் மிக்க மனங்குழம்பித் திகைத்துப் போய் அதிக ஆபத்துக்குள்ளாகி யிருப்பான். முருகப்பனே எத்தகைய கலக்கத்தையும் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் தனக்குத் தெரிந்தவரையில் சோரனூர் இருக்கும் திக்கையே தன் குறிப்பில் வைத்துக்கொண்டு தைரியத்தோடு முன்னேக்கிச் சென்று கொண்டே யிருந்தான்.

எப்போதும் தைரியத்திற்கு மிஞ்சிய உதவி ஆபத்தில் வேறெதுவும் கிடையாது. தைரியமும், நம்பகமும் இருந்தால் சந்தேகம், கலக்கம், கோழைத்தனம் யாவும் பறந்து போம். அவன் மனேதிடமும் நம்பகமும் இருக்கிறமாதிரியே காரியமும் முடியும். பாபம் முருகப்பன் தன்னுலானவரையில் மழையிலும் காற்றிலும் அடிபட்டுக்கொண்டு செல்வதும், அவற்றால் அடிபட முடியாமல் மூச்சுத்திணறிப் போவதுபோல் இருக்கும் சந்தர்ப்பத்தில் சற்று நிற்பதும், அதிலும் கஷ்டமாகத் தோன்றின் சற்று பேசாமல் ஒருபாறைமேல் உட்கார்ந்து கொள்வதுமாய்ச் சென்றுகொண்டே யிருந்தான்.

இவ்வாறு சொல்லொணுக் கஷ்டங்களை யெல்லாம்—அவன் பிறந்தது முதல் அனுபவிக்காத கஷ்டங்களை யெல்

லாம் பட்டுக்கொண்டானேனும் கூடியவரையில் வழிமட்டும் தவறாதபடி மிக்க ஜாக்கிரதையோடு கவனித்துக் கொண்டே சென்றான். அதுவே அவனுடைய நோக்கம். ஏனெனில் அவன் அப்படி வழிதவறிப்போய்த் தான் ஜலபுரத்திற்குச் செல்லும் பாதையில் சோரனூரைச் சந்திக்காமற் போய்விட்டாலோ பெரிய ஆபத்தாய் முடியும். பிறகு அவன் வழியறிந்து தன் வீடுபோய்ச் சேர்வது சந்தேகமாகவே முடியும். முருகப்பன் வாலிபனாயினும் மிக்க துணிகரத்தோடும், மனக்கலக்க மின்றியும், ஊக்கத்தோடும் சென்றதால் வழிதடுமாறாமல் கடைசியில் சோரனூரை நெருங்கினான்.

அவ்வூரைக் கண்டதே அவன்மனம் சற்று நிம்மதியடைந்தது. அவ்வூரில் அவன் தங்கவேண்டிய இடம் எல்லப்பன் என்பவருடைய வீடு. அக்கிராமத்தில் அவரே மேட்டிக்குடி. அவர் சற்று செல்வாக்கு முடையவர். முருகப்பனுக்கு அந்த ஆபத்தானவேளையில் தங்க வேறு இடமில்லை. அவன் கஷ்டத்தோடு கடைசியில் எல்லப்பர் வீட்டை நெருங்கினான். அவன் அவ்வீட்டைக் கண்டதும் ஆவலோடும் ஆத்திரத்தோடும் சென்று தெரு வாயிற்படிக் கதவின் முன் நின்று கதவைத் தட்டினான். தைரியநாதர் "உங்கள் நாட்டில் தெருக்கதவிற்குத் தாழ்ப்பாளென்றும் பூட்டென்றும் உண்டு. எங்கள் தீவில் அத்தகைய சங்கதிகளே இல்லை. அதிதிகளுக்கு எப்போதும் கதவு திறந்தேயிருக்கும்" என்று கூறியது முருகப்பன் நினைவிலிருந்தது. ஆகையால் அவ்வீட்டின் தெருக்கதவு தாளிடப்பட்டிருந்ததை யறிந்ததே யவனுக்குமிக்க வியப்பாய்விட்டது. ஆயினும் காற்று மழை மும்முரமாக அடிப்பதால் கதவை மூடித் தாளிட்டிருக்கிறார்களாக்கும் என்று எண்ணிக் கொண்டான். கடைசியில் கதவைத் தட்டினான். ஒரு

வரும் பதில் அளிக்கவில்லை. பன்முறை தட்டினன். சந்தடியேயில்லை. அவனுக்கோ வெளியில் அடிக்கும் காற்று மழையைச் சகித்துக்கொண் டிருப்பது மிக்க கஷ்டமாக விருந்தது. கடைசியில் தன் கைக்கோலால் கதவைப் பலமாக அடிக்கவும் குத்தவும் தொடங்கினன்.

அச்சமயம் பகல் உச்சிவேளையே யாயினும் வானம் கரிய மேகங்களால் நிறைந்திருந்ததோடு, சகிக்கொணுக் காற்று மழையும் இடி மின்னலும் அந்த வேளையை நள்ளிரவுபோற் செய்து விட்டன. முருகப்பன் காலையிலிருந்து அக்காற்று மழையில் அடிபட்டு நடந்துவருபவன். அவனுக்குப் பசியும் களைப்பும் சகிக்க முடியவில்லை. அவை யெல்லாவற்றையும் விட தற்சமயம் இக்காற்று மழைக்குத் தப்பித் தலையைக் காப்பாற்றிக்கொள்ள எங்கேனும் இடம் அகப்பட்டால் போதும் என்றிருக்கிறது. கோலாலடித்தும் குத்தியும் வீட்டின் கதவு திறக்கப்பட்டபாடில்லை. அவனல் கூடியவரையில் சத்தமிட்டுப் பார்த்தான். ஒருவரும் ஏனென்று கேட்பாரில்லை. கடைசியில் தன் முயற்சிகளெல்லாம் வியர்த்தமாய் விட்டதோடு தான் தொண்டை நோகக் கூச்சலிட்டும் ஒரு பயனுமில்லாமற் போகவே, இனி யென் செய்வது என்று சிந்தித்தான். கடைசியில் சில அடிகள் பின்னல் வந்து அவ்வீட்டின் மேல்பாகத்தை முழுமையும் நோக்கினன். அங்கிருக்கும் புகைப்போக்கிகளில் கொஞ்சம் கூடப் புகை வரவேயில்லை. அதைக் கண்டதே யவன் பாடு பெருந்திகிலாகி விட்டது. ஏனெனில் புகை வாாதிருந்தால் வீட்டில் யாரும் குடியிருக்கவேயில்லை யென்று கருதவேண்டும். அவ்வீட்டிலுள்ளவர்களை, அவர்களின் ஆதரணையை நம்பியே அவன் அச்சமயம் வந்திருக்கிருன். அவ்வீடு அடைக்கப்பட்டிருந்தால் அவன் கெதி யென்ன? எத்தகைய தைரிய

சாவிக்கும் அத்தகைய சந்தர்ப்பத்தில் மனம்முறிந்து இடி விழுந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. அப்படி யிருக்க, காற்று மழைக்குத் தங்க இடங்கிடைக்குமென்று நம்பி, அந்த வீட்டையே எதிர்பார்த்து வந்த முருகப்ப னுக்கு மனவேதனை யெவ்வாறிருக்கும்.

முருகப்பன் அத்தீவார்கள் அதிதிகளை யெப்போதும் அன்போடு ஆதரிப்பவர்கள் என்றறிவான். அதிலும் அந்த வீட்டிலுள்ளவர்கள் அச்செய்கையில் முதன்மை யானவர்கள் என்று நன்கறிவான். அப்படியிருக்க அத் தகைய வீடு இம்மாதிரி அடைக்கப்பட்டிருப்பதால் வீட்டி லுள்ளவர்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ! என்று கலக்கத்தோடு சிந்தித்தான். கடைசியில "ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கவேண்டும்-இன்றேல் இப்படி யிராது. ஆத லின் நாம் அந்த உண்மையை யறியவும், இந்த இரவு இக் காற்று மழைக்கு ஒரு அடைக்கல ஸ்தானம் பார்த்துக் கொள்ளவும், எந்த வழியாகவாவது இவ்வீட்டிற்குள் நுழையவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அதாவது சாளரம் முதலிய எதையாவது உடைத்து உள்ளே செல்வதென்று துணிந்துவிட்டான்.

உண்மையில் நடந்த தென்னவெனில் எல்லப்பனும் அவனுடைய தங்கையும் வீட்டிற்குள் தான் இருக்கிறார்கள். வெளியில் யாரோ வந்து கதவைத் தட்டியது, பிறகு மிக்க சத்தத்தோடு கோலால் தட்டியது, பிறகு இடித்தது யாவும் அவர்கள் செவியில் நன்றாய் வீழ்ந்தன. வந்தவனை யுள்ளே யழைத்துக்கொள்ளலாமா வேண்டாமா என்பதில் இரு வர்க்கும் சச்சரவு நடந்துகொண் டிருக்கிறது.

பாப்பம்மாள் அதிதிகளை யாதரிக்கும் குணமுடைய வளல்ல. அவளிடம் சிவகாருண்யமாவது சினேக வாஞ்

சையாவது கிடையாது. இயற்கையாகவே மாதர்களிடம் இத்தகைய குணம் இருப்பது அருமை. அவர்களிடம் உலோபகுணமே பெரும்பாலுமிருக்கும். எக்காரணத்தாலாயினும் சரி, தங்கள் பொருளில் கொஞ்சம் அன்னியர்க்குக் கொடுப்பதாயின் அவர்கள் மனம் சகியாது. அத்தகைய மனைவிமார் பிரியத்திற் குட்பட்டு நடக்கும் மூடர்களாகிய ஆடவர்களும் அனேகர் உண்டு. அதிலும் இக்கலி காலத்தில் அத்தகையோரை யதிகமாய்க் காணலாம். சற்று கௌரவமாகக் கருதப்பட்ட மனிதன் ஒருவன் ஒரு சன்னியாசிக்கு அன்னமளிப்பதாய் வாக்களித்து விட்டுத் தன் வீட்டிற்கு வந்தான். அது தெரிந்த அவன் மனைவி "இதென்ன பேரவதி! எந்தச் சோம்பேறித் தடியன் வந்தாலும் இங்கு வட்டித்துக் கொட்டயார் உறுதியாயிருக்கிறார்கள். அதெல்லாம் முடியாது. நீ வேண்டுமாயின் ஆக்கிப் போட்டுக்கொள்" என்றாள். பாபம்! பெண் பேய்க்கு அடங்கியொழுகும் பெண்ணினும் பேதையாகிய மூடன் என்செய்வான். "சுவாமி! வீட்டில் பெண்டுகள் அசௌக்கியமுற்று விட்டார்கள். தாங்கள் தயவுசெய்து வேறெங்கேனும் பொசிப்புக்கு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான். இம்மாதிரி மாதரை மனைவியராக வைத்துக்கொண்டு வாழ்வதினும் சந்நியாசம் பெற்றுக்கொள்ளவது மிகச் சிறந்தது. பெண்களுக்குச் சிக்கனம் என்றகுணம் இருக்கவேண்டியது அவசியமே. சிக்கனமாவது அவர்கள் குடும்ப விவகாரங்களில் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்வதோடு வீட்டிலுள்ள பண்டங்களை வீணாக்காமல் செட்டாய்க் குடித்தனத்தை நடத்தவேண்டும் என்பதே. ஆனால் இக்காலத்து மாதர் தங்கள் பொருளை அன்னியர்க்களிக்கலாகாதென்ற லோபமுடையவர்களாக விருக்கிறார்கள். அதனால் கெட்ட பெய

ரையு மடைகிறார்கள். தன் மனைவி யாவராலும் நன்கு மதிக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு கணவன் தன் மனைவிக்கு நற்புத்தி கூறி நல்வழியில் அவள் நடக்கும்படி செய்யக் கடமைப்பட்டவன். ஆனால் பெண்பாலின் மயலிற் சிக்கி அவளுக்கஞ்சி பெண்வழி யொழுகும் பெரும் பேதை யெவ்வாறு அப்படிச் செய்வான்? அந்தோ! அவளோடு, இன்னும் அவளினும் அதிகமாக அவன் அவமதிப்பையடைவான். இனி நமது கதையைக் கவனிப்பாம்.

6-வது அத்தியாயம்.

186514

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபடி சோரனூரில் இருக்கும் எல்லப்பன் என்ற பெரிய குடித்தனக்காரனும், அவன் சகோதரியாகிய பாப்பம்மாளும் வெளியில் யாரோ கதவைத் தட்டுவதைக் கேட்டு அந்த அதிதியை யுள்ளே சேர்க்கலாமா? அப்படியே யனுப்பிவிடலாமா வென்பதைப்பற்றி வாதம் செய்துகொண் டிருந்தார்கள். தங்கைக்கு வீண் செலவிற்கு இடங்கொடுக்க விருப்பமில்லை. அங்கு வரும் அதிதிகள், வழிப்போக்கர்கள், வர்த்தகர்களின் காரியஸ்தர்கள், யாசகர்கள் யாவர்க்கும் அம்மாதின் மேல் வெறுப்பும், அவள் விஷயத்தில் பயமுமே.

இத்தகைய தங்கை, தன் தமையனுடைய உதாரகுணத்தைக் கண்டித்துப் பேசிக்கொண் டிருக்கும்போதுதான் முருகப்பன் கதவைப் பலமாகத் தட்டத்தொடங்கினன். அவர்கள் சம்பாஷணை மும்முரமாக விருந்தாலும் கதவை யாரோ தட்டும் சத்தம் இருவர் செவிகளிலும் கேட்டது. தங்கை கேட்காதவள்போ லிருந்துவிட்டாள். ஆனல் தமையன் மனம் இரக்கமுடையதாதலால் அய்யோ! யாரோ காற்று மழையில் அகப்பட்டுச் சகிக்காமல் அடைக்

கலம் தேடுகிறார்கள்" என்று கருதித் தன் தங்கையை நோக்கி "ஹா! இரு; யாரோ தெருக்கதவைத் தட்டுகிறார்கள். பாப்பம்மாள்! போய்க் கதவைத்திறந்து யாரென்று பார்" என்றாள்.

தன் தமையன் கூறிய மொழிகளைக் கேட்ட அக்கன்னெஞ்சுடைய மாது, மிக்க கோபாவேசத்தோடு "ஆ! போய் முன்னே கதவைத் திறவுங்கள். அதைவிட வேறே வேலையென்ன. பேஷ், ஏன் வழியே போகிற கொள்ளையடிக்கும் திருடர்களை யெல்லாம் வீட்டிற்குள் விட்டுக் கொண்டால் இங்கு கொஞ்ச நஞ்சம் இருக்கும் பொருட்களை யெல்லாம் தாராளமாய் எடுத்துக்கொண்டு போவார்கள். இது வரையில் பிரயாணிகள், ஏழைகள் என்று கூறி வழியே போகிற திருடர்களை யெல்லாம் அப்படியே துரத்தாமல் உள்ளே யழைத்து விருந்தாளிகளாக வைத்து உபசரித்த மூடத்தனத்தால்தான் சகலவஸ்துக்களும் புஷ்டியாய் நிறைந்திருந்த வீடு நீர் வற்றிய குளம் போல் ஆய்விட்டது. நாளைக்கு வீட்டிலிருப்பவர்களுக்கே போதுமான ஆகாரம் இருக்கிறதா என்பது சந்தேகமாக விருக்கிறது. போதாக்குறைக்கு வழியிற் செல்லும் திருடரை யுள்ளே யழைத்துக்கொள். இதைவிட வேலை யென்ன ?" என்றாள்.

அவள் தமையனாகிய எல்லப்பன் "தங்காய்! நம் வீட்டில் இப்போதிருக்கும் தானியம் முதலியவை ஒருவருட ஆகாரத்திற்குப் போதும். மேலும்...." என்பதற்குள், பாப்பம்மாள் பின்னும் மிக்க ஆத்திரத்தோடு "என்ன? என்ன? திடீலென்று பஞ்சம் வந்தால் அரைவயிற்றுக் கேனும் உதவுமே யென்று சேமம் செய்துவைத்திருக்கும் அறப்பொருள்களா ஒரு வருடத்திற்கு ஆகும்? அதைக்

கொள்ளையடித்துக் கொண்டுபோகவா இத்திருடரை உள்ளே விடப்போகிறாய்?" என்றாள்.

எல்லப்பன்:—"திருடர்களா! இப்பிரதேசங்களில் திருடர்களே இல்லை. இங்கு வழிப்பறி கொள்ளைக்காரரின் தொந்தரையில்லை யென்று நான் பன்முறை யுனக்குக் கூறியிருக்கிறேன். இத்தீவு நிம்மதியும் சமாதானமுமுடையது" என்றான்.

பாப்பம்மாள்:—"வழிப்பறி கொள்ளைக்காரர் இராவிடினும் அவர்களைவிடக் கெட்டவர்கள் வரலாகும். நேற்று மிக்க அயோக்கிய திருட்டுப்பயல்கள் போன்ற பயங்கரமான மனிதர் ஏழெட்டுப்பேர் இவ்வழியாய்ச் சென்றதை நான் கண்டேன். அவர்களிடம் துப்பாக்கிகளும், முரட்டுத்தனமான கத்தி முதலியவைகளுமிருந்தன. யோக்கியமான சமாதானமுடைய மனிதர்களிடம் அத்தகைய ஆயுதங்களிருக்கவேண்டிய அசியமில்லையே. யோக்கியமான மனிதர் எவரும் அம்மாதிரி ஆயுதங்களைத் தம்மிடம் வைத்துக்கொண்டிரார்கள்" என்றாள்.

அச்சமயம் முருகப்பன் பலமாய்க் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அதோடு காற்றும் மழையும் அதிகமும் முரமாக அடிக்கும் சத்தத்தைக் கேட்டதே, தமையனும் தங்கையும் பீதியோடு ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள். பாப்பம்மாள் கதவையிடிப்பது திருடரே யென்று நிச்சயமாக அறிந்தவள்போல் "அய்யோ! நம்மிடம் கொஞ்சம் பணம் இருப்பதை மட்டும் அவர்கள் அறிந்து வருவதாயின் நம்பாடு அடியோடு தீர்ந்துவிட்டமாதிரியே" என்றாள்.

எல்ல:—"வீணான குழப்பம் நீயே ஏன் செய்து கொள்கிறாய்? நீ மெதுவாய்ப் பூனைபோல் சென்று எத்தனை

பேர் வந்திருக்கிறார்கள் என்று சாளரத்தின் வழி யாய்ப் பார்.. அதற்குள் நான் துப்பாக்கிகளைக் கெட் டிக்கிறேன்'' என்றான்.

தங்கை யவ்வாறே பூனைபோல்நடந்துபோய்ச் சாளரத் தின் சந்து வழியாய்ப்பார்த்து வந்து "ஒரே யொருவாலி பனே; மிக்க கஷ்டத்திலிருப்பவன்போல் அவஸ்தைப் பட்டுக்கொண்டு நிற்கிறான். ஆனால் மறைவில் அவன் பின் னால் எத்தனைபேர் இருக்கிறார்களோ யாருக்குத்தெரியும்?'' என்றாள்.

எல்ல:—''சேசே! மறைவாகக் கூட வேறு ஆட்களிருக்கிறார் களோ; ஒருவருமில்லை யென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். அப்படியிருந்தால் யாவரையும் நான் ஒழித்து விடுவேன். அவன் யாரோ பாபம் இக் காற்று மழையில் அகப்பட்டு திசைதப்பி நற்கால மாய் இந்த வீட்டைக்கண்டு இங்கு வந்து சேர்ந்தான் என்பதே உண்மை. பாப்பா! போய்ப் பேசாமல் கத வைத்திறந்து அவனை யுள்ளே யழைத்துவா. இது இல்லறத்தாராகிய நாம் அதிதிகளுக்குச் செய்யவேண் டிய கடமை. மேலும் இச்சமயம் இத்தகைய பயங் கரமான காற்று கல்மழையுடன் கலந்து அடிப்பது பலம் பொருந்திய கட்டிடத்திலிருக்கும் நமக்கே பீதியை யுண்டாக்குகிறதெனில்,வழிதவறியவனுயிருக் கும் ஒரு பிரயாணிக்கு-இக்காற்றிலும் மழையிலும் அடிபட்டுப் பசி வேதனையோடு தங்க விடமின்றித் தவிக்கும் ஒரு வாலிபனுக்கு எத்தகைய இம்சையா யிருக்கும். சீக்கிரம் போய்க் கதவைத்திற; இது பெரும் புண்ணியச்செயல். இதைச் செய்யாது விட் டால் இது ஆண்டவனுடைய கோபத்தை யுண்டாக்கு வதுமாகும்'' என்றான்.

இதுகாறும் தன்னால் கூடியவரையில் பார்த்த முருகப்பன் கடைசியில் சாளரத்தை யுடைத்துக்கொண்டு உள்ளே தாழ்வாரத்தில் குதித்தான். அதைக்கண்ட பாப்பம்மாள் தன் தமையனை நோக்கி "ஆமாம். இவன் சாளரத்தை யுடைத்து உள்ளே வருவது மிக்க நியாயமான நடக்கையோ" என்று முருகப்பனைச் சுட்டிக்காட்டினாள்.

அவள் தமையன் தன் கையில் பிடித்த துப்பாக்கியை நீட்டியபடி முருகப்பனை நோக்கிச் சென்றான். முருகப்பன், "அய்யா! பொறும் பொறும். இதென்ன அய்யா? இத்தகைய பயங்கரமான காற்றும் மழையும் அடிக்கும் வேளையில் திசைதப்பி வருகிறவர்களுக்கு ஆதரணை செய்ய வேண்டியதிருக்க, என்ன அடித்துக்கொண்டாலும் பதிலில்லையே; வீட்டிலிருப்பவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ என்ற பீதியோடு எப்படியேனும் உள்ளே நுழைந்து இக்காற்று மழைக்கேனும் தப்பிப் பிழைக்கலாமென்று உள்ளே வந்த மனிதன்மேல் துப்பாக்கியை நீட்டுகிறீரே; இதுதானா இல்லறத்தான் நீதி. உமது வீட்டைத் தானா அதிதிகளுக்கு எந்த வேளையிலும் மூடாமல் திறந்து வைக்கப்பட்டிருக்குமென்று கூறினீர்கள்? பேஷ் அதிதிகளுக்கு நல்ல ஆதரவு?" என்றான்.

வாலிபன் மொழிகளைக் கேட்ட எல்லப்பன் தன் துப்பாக்கியைக் கீழே தாழ்த்திக்கொண்டு "நீ யார்? உனக்கு இங்கே யென்ன வேண்டும்?" என்று வினவினர்.

முருகப்பன்:—"என்ன அய்யா? யார் என்ன வேண்டுமா? ஏன் நான் உம்போன்ற மனிதனே; இச்சமயத்தில் எனக்கு யாவுமே வேண்டும். ஆகாரம் வேண்டும், குளிரைச் சமாளிக்கச் சாராயம் வேண்டும், இரவிற்குப் படுக்கப் படுக்கை வேண்டும், காலையில் இதை

விட்டு அப்புறம் செல்ல ஒரு குதிரை வேண்டும்'' என்றான்.

அவன் கூறியவற்றைக் கேட்ட பாப்பம்மாள் தன் தமையனை நோக்கி வெறுப்போடு "இங்கே அப்படிப்பட்டவர்கள் யாரும் வருவதில்லை யென்று கூறினீரே. இம்மாதிரி முரட்டுத்தனமாய்த் தனக்கு வேண்டியதைக் கொடுத்தே தீரவேண்டுமென்று எப்படிப்பட்டவர்கள் கேட்பார்கள்'' என்று கூறிவிட்டு நேராய் முருகப்பனை நோக்கி,

"அய்யா உனது கட்டுக்கதையையும், தந்திர சாமார்த்தியத்தையும் ஒரு பக்கம் கட்டிவைத்து விட்டு இந்த விடத்தைவிட்டுப் போய்விடும். இது சாதாரண வழிப் போக்கர்களுக்கு இடமல்ல'' என்றாள்.

முருகப்பன் "என்ன அம்மா? இத்தகைய காற்று மழையில் சௌக்கியமாயிருக்கக் கிடைத்த இக்கட்டிடத்தை விட்டு வெளியிற் போகவா சொல்லுகிறாய்? நீ யென்னை யாரென்று எண்ணிக்கொண்டாய்? நீ கரங்களை நெறித்துக்கொள்வதையும், பயங்கரப் பார்வையாய்ப் பார்ப்பதையும், என்னை வீட்டைவிட்டுத் துரத்தக் கருதுவதையும் நோக்கின், என்னை யொரு நாடோடியாகவோ திருட்டுப்பயலாகவோ எண்ணிக்கொண்டாய் என்று நான் கருதவேண்டி யிருக்கிறது'' என்றான்.

எல்லப்பன் "ஓ வாலிபனே! அப்படியாயின், எங்களுக்கு விருப்பமிருப்பினும் இல்லாவிடினும், நீ யுன் பிரியப்படி யிங்கு இருந்தே தீர்வதாகக் கூறுகிறாயோ?'' என்றான்.

முருகப்பன்:—"அய்யா! இவ்விஷயத்தில் உன் விருப்பத்தின் படி நடக்க மட்டும் உனக்கு என்ன நியாயம் இருக்கிறதென்று எண்ணி யிருக்கிறாய்? ஏனையா, பயங்கர

மான புயற்காற்றடிப்பதும் கல்மாரி பொழிவதும் உமக்குத் தெரியவில்லையா? அதோடு இப்பிரதேசத்தில் உமது வீடு தவிரச் சுற்றுப்பக்கங்களில் மைல் கணக்காக வேறு வாசஸ்தலமில்லை யென்பது உமக்குத் தெரியாதா? அய்யா! ஆபத்தில் ஆதரவு வேண்டுமென்று அடைக்கலம் விரும்புகிறவர்களிடம் இப்படிக் கேலியாகப் பேசுவது மலைநாடுகளில் தகும். ஆனால் இந்தத் தீவில் வசிப்பவர்களுக்கு இது மிக்க அதிசயமான வார்த்தையாகவே தோன்றுகிறது- நான் குளிரால் தலை நடுங்கிக்கொண்டிருக்கிறேன்- நீங்களோ நெகிடித்தீயை யடியோ டணைத்துவிட்டீர்கள். ஆயினும் நான் அதைச் சரிப்படுத்திக்கொள்கிறேன். அதற்காக நீங்கள் கஷ்டம் எடுத்துக் கொள்ளவேண்டாம்" என்று கூறிக்கொண்டே, தீக்கிளறும் இரும்புக் கம்பியை யெடுத்துக்கொண்டு நெகிடித்தீயில் இருந்த இன்னும் எரியாத மீதிக் குச்சிகளைக் கிளறிவிட்டான். பாப்பம்மாள் இப்போது அத்தீயை யணைத்துவிட்டால் பிறகு அந்த விறகு உதவியாகுமென்று கருதியே அத்தீயை யணைத்துவிட்டாள். முருகப்பன் அதோடு நிற்கவில்லை. நெகிடித்தீ யெரிய ஆரம்பித்ததே அந்த வெளிச்சத்தில் அருகில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த விறகுகள் அவன் கண்களுக்குப் புலப்பட்டன. அவன் உடனே நான்கைந்து நல்ல விறகுகளை யெடுத்து நெகிடித்தீயில் போட்டு விட்டான். தீ யுடனே ஜொலித்தெரியத் தொடங்கியது.

பாபம் பாப்பம்மாள் விறகைப் பலம் பலமாக நிறுத்து உபயோகித்துக்கொண் டிருந்தாள். அவள் கண்முன்

விறகு இம்மாதிரி யுபயோகிக்கப்பட்டது அவள் மன திற்குச் சகிக்கொணு வருத்தத்தை யளித்துவிட்டது.

முருகப்பன் வலியவே சுதந்திரம் காட்டி அம்மாதிரி நடந்துகொண் டிருக்கையில் பாப்பம்மாள் இவனை யெப் படி வீட்டைவிட்டு ஒழிக்கலாமென்று சிந்தித்துக் கொண் டிருக்கிருள். அவள் தமயனுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. அத்தகைய இராக்காலத்தில், பயங்கரமான காற்று மழையில் வந்த அதிதியை ஆதரிக்காமல் விட்டுவிடுவதே அவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. முரட்டுத்தனமாய் அவனை வீட்டினின்றும் துரத்த அவனுக்குத் தைரியமா வது மனமாவது இல்லை. அவனேடு சச்சரவு தொடுக்க வோ ஒரு காரணமும் தோன்றவில்லை. முருகப்பனுடைய அழகிய அவயவங்களும் அவனுடைய கம்பீரமான தோற் றமும் அவன் அணிந்திருந்த உடைகளும் அவன் தோற் றத்தை உன்னதமாகத் தோற்றுவித்தன. அவன் கரிய கண்கள் மிக்க பிரகாச முடையவை. அவன் சிரம் வட்ட வடிவாய் காண்போர் மனதைக் களிக்கச் செய்யத்தக்கது. அவன் உருவம் எல்லப்பன் உருவத்திற்கு முற்றும் மாருக விருந்தது. எல்லப்பன் குட்டையாய், தொட்டிக்கால் உடையவனுய் இருந்தான். மொத்தத்தில் அவனுருவம் அவலட்சணமானதே. அவனுக்கு வயது ஏறக்குறைய ஐம்பதிருக்கும். முருகப்பனுக்கு இருபது.

ஆயினும் எல்லப்பன் உள்ளத்தில் நற்குணமுடைய வன். இரக்கம், சீவகாருண்யம், பரோபகாரம் முதலிய நற்குணங்கள் அவனிடம் இயற்கையா யுண்டு. ஆகையால் வந்தவன் இக்காற்று மழைக்கும், பசியை யடக்கவும் அடைக்கலஸ்தானம் வேண்டிவந்தானே யன்றி அவனிடம் வேறெவ்வித சிந்தனையு மில்லையென்று தன்மனதிற்பட்ட தும், தன் தங்கை தன் கருத்துக்கு மாருக எண்ணுவ

தையும் மதிக்காமல், அத்தகைய வாலிபனுக்கு இடமளிக்க எப்படி மறுப்பதென்று கருதி, தன் இயற்கையான நற்குணம் அவனுக்குப் புலப்படச் செய்யும் நோக்கத்தோடு அவனிடம் அன்புகாட்டிப் பேசத் தொடங்கினான்.

புதிதாய் வந்த மனிதன் அவ்வளவு சுதந்திரம் காட்டிப் பேசுவதைக் கண்டு மிக்க வியப்படைந்த பாப்பம்மாள் தானே பேசத்தொடங்கி, "நீ மிக்க துரிதப்படுகிறாய்-இந்த விறகை-அதிலும் இப்படிப்பட்ட நல்லவிறகை வீணாய் எரித்துவிடுகிறாயே. உனக்குத் தாழ்ந்தவிறகு உதவாது போலும்" என்றாள்.

முரு:-"ஏனம்மா! கடல் தானே வெளியில் எறிந்த கட்டைகளுக்காக நீயேன் மிக்க வருத்தப்பட்டுக் கொள்கிறாய்? பாபம் இப்பலகைகள் தங்கள் வாழ்நாட்களில் நல்ல வேலை செய்தன. இவைகள் கப்பலின் பக்கச் சுவர்போல் ஆணிகளால் பிகியப்பட்டிருந்தபோது எவ்வளவோ காற்று மழைகளையெல்லாம் சமாளித்துக்கொண்டு எத்தனையோ ஆபத்துகளினின்றும் மனிதரைக் காப்பாற்றின. கடைசியில் அவைகள் கடலால் கரையிலெறியப்பட்டு நெகிடித் தீயில் மடிய வேண்டிய நிலையை யடைந்தன" என்று அலட்சியமாகவும் வேடிக்கையாகவும் கூறினான்.

பாப்பம் :—"சரிசரி. நீ கூறுவது என்னவோ உண்மையே. கட்டைகள் வீணாக எரிந்துபோகின்றன. நீ நன்றாய் உன் தேகத்திலும் உடைகளிலு மிருக்கும் ஈரத்தை நீக்கிக்கொள்" என்றாள்.

எல்ல :—அப்பா! இத்தகைய காற்றுமழையைக் காண்பது மிக்க கம்பீரமான காட்சியாக விருக்கிறது.

தங்கை :—"இத்தகைய காற்றையும் மழையையும் மறுபடி காண்பதும் அபூர்வம்" என்றாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டேயிருக்கையில், இடையில் முருகப்பனுடைய தேகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த பாப்பம்மாள் தன் தமையனை நோக்கித் திடீலென்று "அண்ணு! நீ முன்னே இந்த வாலிபர்க்கு உலர்ந்த உடை கொடுத்துவிடு, ஆகாரத்திற்கு ஏதேனும் ஆயத்தம் செய்யவேண்டியதைக் கவனி. இவர் இக்காற்று மழையி லடிபட்டது போதாதென்று நீ உட்காரவைத்துக்கொண்டு பழைய கதைகளைப் பேசிக்கொண் டிருப்பதில் பயனென்ன. இக்குளிருக்கு பாபம் இவர் கொஞ்சம் சாராயம் அருந்த விரும்புவார்-நீர் அன்போடு கேட்டுக் கொண்டால்" என்று கூறினள்.

7-வது அத்தியாயம்.

தன் தங்கையின் சுபாவமான குணம் எல்லப்பனுக்கு நன்றுகத் தெரியும். ஒருவர்க்கு வீட்டிலிருக்கும் பொருளை யிரவலளிப்ப தெனினும் அவளுக்குப் பிடிக்காது. அதிலும் ஒருவர்க்கு வீட்டிலுள்ள பொருளை யளிப்பதாயின் அவள் மனம் சற்றேனும் பொறுக்குமோ. அவளுடைய குணம் அவனுக்கு நன்றுகத் தெரியும். ஆகையால் அவள் அப்படிக் கூறியது எல்லப்பனுக்குச் சொல்லொணு வியப்பாயிருந்தது. முருகப்பன் "அம்மா! இந்த ஈரவுடைகளைக் களைந்துவிட்டு உலர்ந்த வேறுடைகளை யணிந்துகொள்ள எனக்கு மிக்க விருப்பமே. அதற்காக மிக்க நன்றி யுடையவனுகவே யிருப்பேன். ஆனல் ஏதேனும் கொஞ்சம் ஆகாரம் எடுத்துக் கொண்ட பிறகே சாராய வகையில் கொஞ்சமேனும் அருந்தச் சம்மதிப்பேன்" என்றுன்.

எல்லப்பன் அவனை யுடனே தன் அறைக்கு அழைத்துச்சென்று அவனுடைய ஈர உடைகளைக் களையச்செய்து உலர்ந்த உடைகளை யளித்து யணிந்துகொள்ளச் சொல்லி விட்டுத் தன் தங்கை யிருக்கும் சமையலறைக்குச் சென்ருன். அவளுடைய இயற்கையின் உலோபகுணம் அடியோடு மாறி அவள் ஒரு அன்னியனுக்கு, அதிலும் முன் பின்னறியாதவனுக்கு உடை முதலியவை யளிக்கச் சொன்னது அவன் மனதில் பெரியதோர் சந்தேகத்தை யுண்டாக்கிவிட்டது.

எவ்வாறெனில் ஒருவருடைய சுபாவகுணம் திடீலென்று அடியோடு மாறி நேர்மாருன குணமுண்டாயின் அவர்கள் சீக்கிரம் மரிப்பார்கள் என்று சாத்திரம் கூறுகிறது. ஆகையால் தன் தங்கைக்கு இம்மாதிரிகுணம் மாறியதால் அவள் எங்கே சிக்கிரம் மரணமடைவாளோ என்று அவன் கலக்க மடைந்தான். உண்மையில் அவள் இறப்பதாயின் அவனுக்கு நல்ல இலாபமே. ஏனெனில், அவள் கணவன் கொஞ்சம் சொத்தோடிருந்தான். அவன் இறந்ததே அச்சொத்தனைத்தும் இவளே யடைந்தாள். அவை யாவற்றையும் தன் தமையன் வசமே ஒப்பித்து அவனிடமே யிருக்கிருள். இப்போதவள் இறந்தால் அச்சொத்தனைத்தும் இவனுக்கே சேரும். ஆயினும் எல்லப்பன் அதைக் கருதாமல், தன் தங்கை யெங்கே மரித்துவிடுவாளோ என்றதனுல் மிக்க வியாகூலமே அடைந்தான். இன்ெெரு விஷயத்திலும் தன் தங்கையின் மரணம் அவனுக்கு வருத்தத்தை யுண்டாக்கியது.

எவ்வாறெனின் அவள் தன் வீட்டில் வந்து சேர்ந்தது முதல் தன் குடும்பச் செலவு குறைந்து வருமானம் பெருகியது. பாப்பம்மாள் குடும்பச்சொத்தில் ஒரு கடுகு கூட வியர்த்தமாகப் போக வொட்டாமல் மிக்க சிக்கனமாய்க்

குடித்தனத்தை நடத்தி வந்ததோடு இவன் குடும்பத்திற்குப் பெரிய பாதுகாப்பாக விருந்து வருகிறாள். அவன் நல்ல குணமுடையவனும், நன்றி யுள்ளவனுமாதலின், நமது தங்கை மரிப்பதே நமக்கு நல்ல இலாபம் என்ற சுய நல நோக்கங்கொள்ளாமல், "அந்தோ! நம் தங்கைக்கு குணம் இப்படி நேர்மாறாகத் திரும்பிவிட்டதே, இது நிலையாகவே திரும்பிவிட்டதோ" என்று பீதியடைந்து, முருகப்பனை யுடையணிந்து கொள்ளத் தன் அறையில் விட்டு விட்டுத் தன் தங்கை யிருக்கும் சமையலறைக்குச் சென்றான்.

அங்கு தன் தங்கை செய்துகொண்டிருக்கும் காரியத்தைக் கண்டதே யவன் மிக்க பிரமை யடைந்துவிட்டான் என்றே கூறலாகும். ஏனெனில் பாப்பம்மாள் புகையில் பதன் செய்து வைக்கப்பட்டிருக்கும் வாத்துகளில் ஒன்றை யெடுத்துச் சமைக்க ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறாள். அதே சமயம் "என்? எப்படியாயினும் ஒரு நாளைக்கு இதை யாரேனும் புசிக்கவேண்டியது தானே. இப்போது இவ்வீரத்தன்மை பொருந்திய வாலிபனே இதைப் புசித்தாலென்ன?" என்று கூறிக்கொண் டிருக்கிறாள்.

எல்லப்பன் தன் தங்கையை நோக்கி "என்ன தங்காய்? இன்று என்ன உனக்குப் புதுநாள் பிறந்துவிட்டது போலிருக்கிறதே. செல்வம் பொருந்திய விருந்தினர்கள் வந்திருந்தபோது கூட இவ்வாத்துகளில் ஒன்றைச் சமை யென்றால் மறுத்துவிட்டாயே. இவன் எந்த நாடோடியோ, இவனை முதலில் உள்ளேயே சேர்க்கமாட்டேனென்றாய். இப்போது அவனுக்காக-அவன் ஒருவனுக்காக ஒரு வாத்தைச் சமைக்கப்போகிறாய். இன்னும் என்ன செய்யவோ அடுப்பில் பாத்திரங்களை வைத்திருக்கிறாய்-

இதென்ன பெரிய விந்தையாகவல்லவோ விருக்கிறது. எனக்கு ஒரு அர்த்தமும் தெரியவில்லையே'' என்ருன்.

பாப்பம்:—“உனக்கு என்ன தெரியும். இவனு நாடோடி. இப்போது உன் வீட்டில் விருந்தாளியாய் வந்திருப்பவன் யாரென்று உனக்குத் தெரியுமா? வீணய் ஆடவர், நாங்கள் தான் மிக்க புத்திசாலிகள் பெண்கள் எங்களை விட அறிவிற்ருழ்ந்தவர்கள் என்று கூறிக் கொள்கிருர்கள். இது வீணன பொய்ப்பெருமையேயன்றி . வேறில்லை. ஆடவர்க்குப் பெண்களைவிடக் கொஞ்சம் மிருக பலம் அதிகமாக விருக்கலாம். அவ்வளவே-திருஷ்டாந்தமாக இப்போது நம் வீட்டில் வந்திருக்கும் வாலிபன் யார் கூறு பார்ப்போம். உனக்குத் தெரியவே தெரியாதென்று நான் நிச்சயமாய்க் கூறுகிறேன்'' என்று பெருமையோடு கூறினுள்.

எல்ல.—“எனக்கெப்படித் தெரியும். நான் பிறந்ததுமுதல் பார்த்திராத ஒருவரை யறிந்துகொள்ள எவ்வளவு தெரியுமோ அவ்வளவே யிவன் விஷயத்திலும் தெரியும்-இவன் யாரோ நாடோடியோ, யாசகனே எனக்கென்ன தெரியும். ஆனல் இவன் நல்ல குணமுடையவனுகக் காணப்படுகிருன்-திருடனுகத் தெரியவில்லை. அவ்வளவே எனக்குத் தெரியும். நான் என்ன ஞான திருஷ்டி யுடையவனு?'' என்ருன்.

பாப்பம்:—உனக்குத் தெரியாது தான். இருக்கட்டும். நமது தங்கம்மாள் தெரியுமோ அல்லவோ?

எல்ல:—என் தெரியாது? அவள் நமது வீட்டில் வேலை செய்வதற்காக அவளுக்கு வாரம் ஒரு ரூபாய் அளிக்கிறேனே.

பாப்பம்:—சரி. தங்கம்மாள் இவ்வாலிபனை யறிவாள்-

இவன் யார் தெரியுமா? ஜலபுரத்திலுள்ள மாளிகை யில் ஒரு மௌன மனிதன் இப்போது கொஞ்சகால மாக வந்து வசிக்கிருரே தெரியுமா?

எல்ல:—ஆம். அவர் ஒரு அபூர்வமான மனிதரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தச் சங்கதிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

பாப்பம்:—"இவ்வளவே யுனக்குத் தெரியும். என்ன சம் பந்தமா? ஏன்? இந்த நாணயமான வாலிபன் அவ ருடைய ஏக புத்திரனே" என்ருள்.

இதைக்கேட்டதே எல்லப்பன் திப்பிரமை யடைந்து விட்டான். ஜலபுரத்திலுள்ள மாளிகையில் ஒருவன் வந்து வசிக்கிருன் என்று சுற்றுப்பக்கங்களி லுள்ளவர்களுக் கெல்லாம் தெரியும். ஒருவன் அந்த மாளிகையில் வந் திருக்கிருன் என்ருல் அவன் செல்வவந்தனுகவே யிருக்க வேண்டும். ஆகையால் அத்தகைய செல்வவந்தன் புத்தி ரனே நம் வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்க நாம் அதை யறியாமல் அவனை நாடோடி யென்றும் திருட னென்றும் கருதி முதலில் அவனை யவமரியாதையாகவே நடத்திவிட்டோமே என்று மிக்க கலக்கமடைந்தான்.

பாப்பம்மாள் தன் தமையனை நோக்கி "அண்ணு! நீ மிக்க புத்தி சூக்குமமுடையவனே. ஆயினும் இவ்வாலி பன் தன் உட்சட்டைக்குள் என்ன அணிந்துகொண்டிருக் கிருன் என்பதைக் கூறு பார்ப்போம்" என்ருள்.

எல்ல:—அவன் என்ன வைத்துக்கொண் டிருப்பான். பணம் போடுகிற ஏதேனும் நாணயமான ஒரு தோற்பை வைத்திருப்பான்.

தங்கை:—பேஷ்! அவ்வளவு தான் உனக்குத் தெரியும். தோற்பையா? ஏன் இரட்டைப் பொன் சங்கிலி

யணிந்துகொண் டிருக்கிறான் என்றால் நீ நம்பமாட்டா யாக்கும்.

எல்ல:—என்ன உனக்குப் பைத்தியமோ - எங்கேனு முண்டா-இத்தகைய சங்கதியை யார் நம்புவார்கள்.

தங்கை:—"இவ்வளவே உனக்குத் தெரிந்தது. இன்னொரு சங்கதி தெரியுமா? அது அப்பட்டம் தங்கச்சங்கிலி- அதிலும் அது எப்படி யிவ்வாலிபனிடம் வந்தது தெரியுமா? நமது சத்தத்தீவின் அரசராகிய தைரிய நாதரே யதை யிவன் தந்தையாகிய மௌன மனித ருக்குப் பரிசாயளித்தார் என்று தங்கம்மாள் என் னிடம் நம்பகமாகக் கூறினாள். எத்தகைய கௌர வம் பொருந்திய மனிதரின் புத்திரன் இப்போது நம் வீட்டில் விருந்தினனாக வந்திருக்கிறான் என்பது உனக்குத் தெரிகிறதா?" என்றாள்.

எல்லப்பன்:—சரி, இவன் செல்வவந்தன் புத்திரனென்று இவனுக்கு இந்த வாத்தைச் சமைத்து வட்டிக்கப் போகிறாயோ.

தங்கை:—உண்மையே. நாம் தக்கவர்களைச் சினேகம் செய்துகொள்ள அவசியமான காரியங்களைச் செய்தே தீரவேண்டும். இவ்வாலிபன் நல்ல கம்பீரமும் அழகு மான தோற்ற முடையவன்.

எல்ல:—அப்படியாயின் அழகிய முகமுடையவர்களை யெல் லாம் வீட்டிற்குள் விட்டுக்கொண்டு அவர்களை யாதரிப்பாய். இவனிடம் அப்பொற்சங்கிலி யில்லா விட்டால் இவன் பட்டினியாகவே அலைந்து கொண்டு செல்லும்படி விட்டுவிட் டிருப்பாய். இது தானே நீ கூறும் நியாயம்?

தங்கை:—நீ கூறுவது உண்மையேயென்று ஒரு பட்சத்தில் ஒப்புக்கொள்கிறேன். நீ கூறுவதைப் பார்த்தால் வழியே செல்லும் நாடோடிகளுக்கும் திருட்டுப் பயல்களுக்கும் என் பொருளை வியர்த்தமாய் இறைத்துவிடச் சொல்லுகிறதுபோ லிருக்கிறது. ஆனால் இவ்வாலிபன் இந்நாட்டில் நல்ல பிரசித்தியான பெயருடையவனாக விருக்கிறான். அதோடு தங்கம்மாள் கூறுகிறபடி, இவ்வாலிபன் நம் தீவின் அரசருடைய புத்திரிகளில் ஒருத்தியை மணம் புரிந்து கொள்ளப்போகிறான். இவன் இரண்டு கன்னிகைகளில் எவரை மணம்புரிய விரும்புவதாய்த் தெரிந்தெடுக்கிறானோ, அன்றே திருமண நாள் நிச்சயிக்கப்படும். ஆகையால் இவன் வலிய வந்தாலும் நாம் இவனை மரியாதையாய் ஆதரிக்காமல் புறக்கணித்து விடுவது மிக்க முட்டாள் தனமாகவே முடியும்.

எல்ல:-"ஒரு அதிதியை வெளியில் துரத்திவிட முடியாதபடியாலேயே அவனை யுபசரித்து ஆதரிக்கவேண்டுமென்பதும், அவன் சுத்த ஏழையாகவும், நமக்குப் பயன்படாதவனாகவுமிருந்தால் அவன் எத்தகைய காற்று மழையிலடிபட்டு வந்தாலும் அவனை யுள்ளே சேர்க்கலாகாதென்பதும் மிக்க தெய்வீகமான நீதியே. சரி, எப்படியாயினும் நாணயமான ஒரு மனிதன் ஆபத்தில் வந்து நம்மிடம் அடைக்கலம் கேட்கிறவரையில் நாம் இரக்கமற்றவர்களல்ல என்பதை யவன் அறியச் செய்வோம்" என்று கூறி விட்டு, வாலிபன் குளிர் காய்ந்துகொண் டிருக்கும் அறைக்குச் சென்று,

"உனக்கு விவசாயத்தொழில் தெரியுமோ?" என்று வினவினான்.

முருகப்பன்:—"அது தெரியாது. பூமியை யுழும் வேலை

யெனக்குத்தெரியாது. ஆனல் கொந்தளிக்கும் கடலில் ஏருழவும், பாறைகளிலும் குன்றுகளிலும் அறுவடை யறுக்கவும் பழகியிருக்கிறேன்" என்ருன்.

அவன் கூறியதன் அர்த்தம், கடலிலும் படகோட்டிக் கொண்டு போகவும், பாறைகளிலும் குன்றுகளிலும் ஏறி அங்கு கடற் பட்சிகள் கட்டியிருக்கும் கூடுகளிலிருந்து, முட்டைகள், குஞ்சுகள், பட்சிகள் முதலியவற்றைக் கொண்டுவருவதுமாகிய தொழில் என்பதே. அவற்றில் கொந்தளிக்கும் கடலில் படகேறிச் செல்வதே மிக்க அபாயகரமானவேலை. மற்றதோ அதனினும் மிக்க அபாயகரமான வேலை. ஏனெனில் பாறையில் பக்கங்களிலுள்ள சந்து பொந்துகளில் பட்சிகள் கூடு கட்டியிருக்கும். பாறையில் உச்சிக்குச்செல்ல இரண்டொரு வழிகள்தானிருக்கும். பக்கங்கள் செங்குத்தானவை யாதலின் கீழிருந்து நேராய்க் குறித்த விடத்திற்குச் செல்லமுடியாது. ஆகையால் பாறையின் உச்சிக்குச் சென்று அங்கிருக்கும் ஒரு கல் முனையில் அல்லது பலமான செடியின் அடிப்பக்கத்தில் ஒரு பெரிய கயிற்றின் ஒரு முனையைக் கட்டிவிட்டு அக்கயிற்றின் முடிகளிட்ட வழியைப் பற்றிக் கீழிறங்கிப் பாறையின் பக்கத்திலுள்ள பட்சிக் கூடுகளைச் சூறையாடவேண்டும். பிடித்த கயிறு அறுந்தாலும், அல்லது கைதவறிக் கயிற்றை விட்டு விட்டாலும் அவன் பாதாளத்தில் கடலில் வீழ்ந்தோ அல்லது பாறையின் அடிவாரத்தில் வீழ்ந்து மண்டையும் எலும்புகளுமுடைந்தோ பரலோகம் போய்ச் சேரவேண்டியதே.

ஆகையால் அச்சங்கதிகள் யாவும் நன்குணர்ந்த எல்லப்பன், வாலிபன் வார்த்தைகளைக் கேட்டதே மிக்க வியப்பும் பிரமையுமடைந்து, "என்ன கடலையுழுவதா? அது பள்ளம் தோண்டாமலே உழும் வேலை. பாறைகளில்

அறுவடையறுப்பது, அப்பா! மிக்க அபூர்வமான வேலை. அதில் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்கு வதைவிட, கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு தூக்கு மரத்தில்தொங்கலாகும். அதிலேனும்கீழே விழமாட்டோ மென்ற நிச்சயமுண்டு" என்றான்.

முருகப்பன் "அவ்வாறு வானத்திற்கும் பூமிக்குமிடை யில் தைரியத்தோடு நிற்கும் ஆனந்தத்தை யொருமுறை யனுபவித்திருந்தால் அப்போது அதிலுள்ள மனக்கிளர்ச் சியும் அபூர்வமான சந்தோஷமும் எத்தகைய தென்று உமக்குத் தெரியும். ஒரு ஊஞ்சலில் ஊசலாடும்போது எத்தகைய சந்தோஷத்தை யனுபவிக்கிறீர். அப்போது உமக்கு இருப்பிடமாகிய ஆசனமாக ஊஞ்சற் பலகையிருக் கிறது. இதில் அத்தகைய உதவிகூட இல்லை. எத்தகைய ஆதரவுமின்றிப் பூரண சுயாதீனத்தோடு ஒரு அற்பக் கயிற்றைப் பற்றிக்கொண்டு நடமாடுவதிலுள்ள ஆனந்தம் அனுபவித்தாலே தெரியும். ஆபத்தா? என் ஆபத்து? நமது சிரமும், அவயவங்களும் தைரியத்தோடு வேலைசெய்து கொண்டிருந்தால் எள்ளளவு ஆபத்துமின்றிச் சுலபமாய் க்ஷேமத்தோடு கீழே வந்து சேரலாம். அந்த உற்சாகம் அனுபவித்தாலே தெரியும்" என்றான்.

தன் மனதிற்குச் சற்றும் பிடிக்காத விஷயங்களைப் பற்றி, அவ்வாலிபன் காட்டிய உற்சாகத்தைக் கண்ட எல் லப்பன் மிக்க வியப்படைந்து அவனை உற்று நோக்கியபடி யிருந்தான். பாப்பம்மாளும் வாலிபன் கூறிய விஷயங்கள் யாவும் கேட்டாள். ஆனால் அவள் அவ்வாலிபனுடைய உற்சாகம் நிறைந்த வதனத்தைக் கண்டு ஒருவித மகிழ்ச்சி யடைந்து அவனை நோக்கி,

"என் செல்லக்குமாரன் போன்ற வாலிபனே! நீ மிக்க தைரியசாலியானவன்" என்றாள்.

எல்ல :—"பேஷ்! நல்ல தைரியசாலியான குழந்தை. ஏன் நல்ல கெட்டியான தரையில் நிம்மதியோடு உலவுவதை விட்டு ஒவ்வொரு கடிகையும் பிராணபத்தை யுண்டாக்கக் கூடிய நிலைமையில் ஒரு அற்பக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்கும் மூடசிகாமணியாகிய செல்வக்குழந்தை யென்று கூறவொண்ணாதோ? அதுகிடக்கட்டும்; இதோ ஒரு வாத்து ஆயத்தமாய் நம்மை யெதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டும் நன்றாய்ச் சமைக்கப்பட்டிருந்தால் மிக்க நேர்த்தியா யிருக்கும். பாப்பம்மாள்! இதற்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் சீக்கிரம் கொண்டுவந்து ஆயத்தம் செய். ஆயினும் இத்தகைய வாத்துக்காக அம்மாதிரி பிராணபத்திற்குத் துணிந்து கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்குகிறவர்கள் இச்சத்தத் தீவில் வசிக்கும் ஆட்களே யன்றி வேறு யாரும் அத்தகைய காரியத்திற் குடன்படார்கள்" என்றான்.

பாப்பம் :—"இப்போது நீ கூறியது சரியே. இச்சமயத்தில் இத்தகைய வார்த்தை விருந்தாளிக் குபயோகப் படுத்த வேண்டியதே நலமாகும்...." என்று கூறும் போது ஒரு சம்பவம் நடந்தது.

அதாவது யாரோ கதவைத் தட்டுவதுபோல் சத்தம் கேட்டது. எல்லப்பனாவது அவன் தங்கையாவது அதைக் கவனிப்பதற்குள் முருகப்பன் தட்டென் றெழுந்துபோய்க் கதவைத் திறந்துவிட்டான். உடனே ஒரு கிழவன் உள்ளே வந்தான். அவன் ஒருவித விகாரரூபமுடையவன். அவனைக் கண்டதே பாப்பம்மாள் மிக்க கோபமடைந்து விட்டாள். ஆகையால் மிக்க ஆத்திரத்தோடு "இதென்ன அநீதம்! இந்த வாலிபனுக்கு இடங்கொடுத்ததே பெருந் தவறாகி

விட்டதுபோல் தெரிகிறது. இவன் இஷ்டம்போல், இவ் வீட்டிற்குச் சொந்தக்காரன்போல் போய்க் கதவைத் தாராளமாகத் திறந்துவிடுகிறான். எந்த நாடோடி நாயும் உள்ளேவந்து நுழைந்து கொள்கிறது. இதென்ன அநீதம் ?'' என்று ஆவேசம் வந்தவள்போல் கூவினாள்.

8-வது அத்தியாயம்.

முருகப்பனுடைய நடக்கையைச் சற்றுமுன்பு பிரத்தியட்ச அனுபவமாகக் கண்டிருந்தாலும் பாப்பம்மாள் அவனை நன்றாயறிந்து கொள்ளவில்லை. பெண்புத்தி அத்தகையதே யன்றோ. பெண்கள் சிக்கனமாய்க் குடித்தனம் செய்யவேண்டு மென்பது விதியே. சிக்கனம் என்றால் தம் கணவரின் வருமானத்திற்குத் தக்கபடி தங்கள் குடும்பப் பொருள்களை வியர்த்தம் செய்யாமல் அளவுப்படி செலவழிக்க வேண்டும். இதுதான் சிக்கனம் என்பது. ஆனால் இக்காலத்தில் அனேகம் மாதர்கள் உலோபத்தனமாகிய இழிகுணமே சிக்கனமென்று கருதி அவ்வாறே நடக்கிறார்கள். நமது பொருளை யின்னொருவர்க்குக் கொடுக்க மனம் பொறாததே உலோப குணம். அதுவே இப்போதிருக்கும் மாதர்களில் பெரும்பாலார் குணம். இக்காரணத்தால் இவர்கள் தங்களுக்கு இழிவான பெயரை யுண்டாக்கிக் கொள்வதோடு தங்கள் கணவர்களுக்கும் அகௌரவத்தை யுண்டாக்கிக் கொள்கிறார்கள். மாதர்களில் உதாரகுண முடையோர்களைக் காண்பது மிக்க கஷ்டமேயாகும்.

பாப்பம்மாள் கோபத்தோடு கூறிய வார்த்தைகளைக் கேட்ட முருகப்பன் அவளை நோக்கி, "நானே கதவைத் திறந்தேன். இப்போது அடிக்கும் காற்றுமழையில் எத்

தகையவர்களா யிருந்தாலும் ஒரு அனுதைச் சிவனே உள்ளே விடாமல் வெளியிலேயே விட்டுவிடலாமா பாபம்! நெகிடித்தீ யணைந்துவிடுகிறது. இதோ விறகிருக்கிறது" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு தேக்குச் சட்டத்தை யெடுத்துத் தீயில் எறிந்துவிடப் போனுன்.

அதைக் கண்ட பாப்பம்மாள் கோபத்தோடு அம்மரத் துண்டை யவன் கரத்திலிருந்து வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு "அய்யோ! இது கடலலைகளால் எறியப்பட்டது. இங்கு ஆபத்துக்குத் தீ யெரிக்கக்கூட ஒரு சுள்ளியேனு மில்லே." என்று கூறிவிட்டு, உள்ளேவந்த ஆளே நோக்கி,

"நீ யார்? இங்கேவந்து நுழைந்தாய்; எந்த ஊர் நாடோடி? இம்மாதிரி உருவத்தை நான் இதுகாறும் கண்டதேயில்லே." என்றுள்.

வந்தவன் ஒரு தடித்த அவலட்சணமான கிழவன். அவன் பார்வைக்கு ஊரூராகச்சென்று சில்லறைச்சாமான் கள் விற்கும் ஹாக்கர்போல் காணப்பட்டான். அவன் "அம்மா! நான் நாடோடியல்ல. ஒரு ஹாக்கர்; நான் இப்பிரதேசங்களில் இதுகாறும் வந்ததில்லே; இது எனக் குப் புது இடமே ஆயினும் குளிருக்குத் தீயும், இரவு தங்க இடமும் அளிப்பதற்காகக் கடவுள் உங்களுக்கு நல்ல ஆசிர்வாதம் அளிக்கும்படி பிரார்த்திக்கிறேன். அன்னி யர்க்கு ஆபத்தில் உதவுவோர்க்கு ஆண்டவ னருள்புரிவார் என்பது உண்மை" என்றுன்.

அவ்வாறு கூறிக்கொண்டே யம்மனிதன் அருகி லிருந்த ஒரு நாற்காலியை நெகிடித்தீயின் பக்கத்திலிழுத்து வைத்து அதன்மேல் உட்கார்ந்து நிம்மதியாகக் குளிர் காயத் தொடங்கினுன்.

அவன் செய்கையைக் கண்ட பாப்பம்மாளுக்குண்டான கோபத்திற்கு ஓர் அளவில்லே. அவள் தன் ஆத்திரத்தை

யெவ்விதமாக வெளியிடலாமென்று தடுமாற்றத்தோடு சிந்தித்துக்கொண் டிருந்தாள். அதற்குள் அவளிடம் அன்புடைய வேலைக்காரியாகிய ஒரு கிழவி, நாம் முன்பு கூறிய தங்கம்மாள் என்பவள், அதுகாறும் அவ்வீட்டில் மூலைகளில் ஒன்றில் எங்கோ இருந்தவள், மிக்க மனக்கலக்கத்தோடும் பீதியோடும் அறைக்குள் தள்ளாடிக்கொண்டே வந்து, பீதியோடு பேசுபவள் போல், எல்லப்பனையும் பாப்பம்மாளையும் நோக்கி,

"ஓ! எஜமானே! எஜமாட்டியே!" என்று சற்று நேரம் தடுமாற்றத்தோடு ஒன்றும் கூறமுடியாமல் விழித்துக்கொண்டிருந்து, கடைசியில் "அந்தோ! நம் வீட்டிலுள்ள முதல்தரமான ஆகாரம், பண்டங்கள், யாவற்றையும் மரியாதையாய் வட்டியுங்கள். இத்தீவுகள் எல்லாவற்றிலும் யாவராலும் அச்சப்படக் கூடியவளாகிய பிச்சிமலை நாகம்மாள் வந்திருக்கிறுள்" என்றுள்.

அவள் மொழிகளைக் கேட்ட எல்லப்பன், அவளுக்குண்டாகிய பீதியையும் கலக்கத்தையும் கண்டு ஒருவிதப் பரிதாபமடைந்து "அவள் எங்கிருந்து வருகிறுள்? இப்போதடிக்கும் காற்று மழையை நோக்க அவள் ஏன் அலைகிறுள் என்று கேட்கவேண்டிய காரணமேயில்லை" என்றுன்.

பாப்பம்மாள்:—இவள் யார் புது நாடோடி? என் தமையன் மட்டும் ஆண்மையோடு நடந்து கொண்டால் நான் சீக்கிரத்தில் இவள் நாடோடித்தனத்தை யெல்லாம் அடக்கி விடுவேன். ஆகா தடையின்றி அடக்கிவிடுவேன். அல்லது ஒரு ஜதை நம் நாட்டு இரும்புக் கொரடாவைக் கொண்டு அடக்கிவிடுவேன்.

வேலைக்காரியாகிய தங்கம்மாள் "அம்மா! இந்நாட்டில் செய்யப்பட்ட எந்த இரும்புக் கொரடாவும் பிச்சிமலை

நாகம்மாளை யொன்றும் செய்ய முடியாது. அவள் சங்கதி யுங்களுக்குத் தெரியாது. அதோ அதோ! அவள் உள்ளே வருகிறுள். உங்கள் நன்மைக்காக அவளிடம் மரியாதை யாகவும் வாஞ்சையோடும் பேசுங்கள்; இன்றேல் நமக்கெல் லாம் கெட்டகாலம் சம்பவித்ததாகவே கருதவேண்டும்" என்றுள்.

அவள் கூறி முடிவதற்குள் ஒரு ஸ்திரீ யுள்ளே வந் தாள். அவள் சற்று வயதானவளே. சிரசு வாயிற்படி யில் இடிக்கத்தக்க உயரமுடையவள். ஒருவிதக் கம்பீர மான பார்வையும் தோற்றமுமுடையவள். அவள் ஒரு வித சாந்தமும் பக்தியுமான குரலில் "அதிதிகளுக்கு ஆதரவு செய்யத் திறக்கப்பட்ட கதவை யுடைய வீடும் அதிலுள்ளோரும் ஆண்டவனருளால் நீடூழி வாழ்க. உலோப குணத்தால் மூடப்பட்ட விடும் அதில் வசிப்போ ரும் ஆண்டவன் கோபத்தால் அழிக" என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தாள்.

பாப்பம்:–"இம்மாதிரி ஒருவர் வீட்டையும் குடும்பத்தையும் மனம் போனபடி வாழ்த்தவும் சபிக்கவும் தைரிய முடைய நீ யார்? இது எந்த நாடென்று நீ எண்ணிக் கொண்டாய்? மனிதர்கள் ஏதோ தங்களிடமுள்ள அற்பப்பொருளை வைத்துக்கொண்டு நிம்மதியாய்க் கடவுளைத் துதித்துக்கொண் டிருக்கலாமெனில் அதற் குக்கூட இடைஞ்சலாய் வழியில் போகும் ஆண்களும் பெண்களுமாகிய நாடோடிகளெல்லாம் உள்ளேவந்து வலிய நுழைந்துகொள்ளும் இந்த நாடு எத்தகைய நாடோ எனக்குத் தெரியவில்லை" என்றுள்.

இவள் கடூர மொழிகளைக் கேட்ட முருகப்பனும் வேலைக்காரியும் இம்மொழிகள் நாகம்மாளை நோக்கியே கூறப்பட்டனவென்று உணர்ந்து அவளுக்குக் கோபம்

அதிகமாக வரவொட்டாது செய்வதற்காக சாந்தமான மொழிகளைக் கூறத் தொடங்கினார்கள்.

இருவரும் அந்நாட்டு வடமொழியில் அவளை நோக்கி "அம்மா! நீ இவர்கள் பேச்சைக்கேட்டுக் கோபம் கொள்ளலாகாது. ஏனெனில் இவர்கள் உன்னை யறியார்கள். உன் பெருமை யிவர்களுக்குத் தெரியாது. இந்த நாட்டிற்கு இவர்கள் புதியவர்கள். இந்நாட்டு ஆசாரங்கள் எத்தகையவை யென இவர்களறியார்கள். ஆகையால் அவர்கள் உனக்குச் செய்யவேண்டிய உபசரணையில் குறைவு ஏற்படுவதற்காக நீ யவர்களை மன்னிக்கவேண்டும். உன் விஷயம் தெரிந்திருந்தால் இவர்கள் இப்படி நடவார்கள்" என்றார்கள்.

எல்ல:—"வாலிபனே! என்னிடம் உபசரணைக்குக் குறைவில்லை. நெடுநாளைக்கு அப்படியே யிருக்கும். அப்பதனிட்டவாத்து அதோ உனக்காகச் சமைக்கப்படுகிறது. இப்படி இருபது வாத்துக்கள் சமைக்கப்பட்டாலும் உண்பதற்கு இங்கு ஆட்கள் வருவார்கள் என்று கருதுகிறேன். இதை யடக்கவேண்டும்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட நாகம்மாள் "ஏ பணத்திற் கடிமையாகிற லோபியே! நீ எதை யடக்கப்போகிறாய்? பூர்வீகமாய் இந்நாட்டிலிருந்தவர்களின் இரக்கமான உதார குணத்திற்கு மாறாக நடந்தது யார். சாந்தமாக விருக்கும் வடகடலும் பயங்கரமாகக் கொந்தளிக்கிறதோ இல்லையோ வென்று பார்" என்று தீப்பொறிபறக்கும் பார்வையோடு கூறினாள்.

பிச்சிமலை நாகம்மாள் என்பவள் அத்தீவில் யாவராலும் அஞ்சப்படும் மாது. அவள் உயரமான கம்பீரம் பொருந்திய உருவமுடையவள். அவளுடைய தொனியும் கேட்போர்க்கு ஒருவித அச்சத்தையுண்டாக்கத் தக்கது.

வயதானாலும் வெயில் மழை பனி இவற்றில் அலைந்து திரிந்த தால் அவள் அழகு குன்றியிருந்தாலும், முகவிலாசம் இன்னும் ஒருவிதப் பிரகாசமுடையதாகவே யிருந்தது. வயதும், பெரும்பாலான துயரமும் அவளுடைய கண்களின் பிரகாசத்தை மங்கச் செய்தன. ஆயினும் அவற்றின் தீட்சணியமான பார்வை ஏறக்குறைய இருந்து கொண்டே யிருந்தது. அவள் மேல்உடை அந்நாட்டினரணியும் கறுப் புடைபோலவே யிருந்தது. அவள் கூந்தலில் ஆங்காங்கு நரை தோன்றியிருந்தது. ஆனால் அவள் அந்த மேல் உடையை யெடுத்துவிட்டபோது, உள்ளே நீல நிறம் பொருந்தியதும் வெள்ளிச் சரிகையில் சித்திரவேலைகள் செய்யப்பட்டதுமாகிய உயர்தர முகம்மல் சிறு சட்டை யணிந்திருந்தாள். அச்சட்டையில் பலவித அபூர்வ வேலைப் பாடுள்ள வெள்ளி யாபரணங்கள் தொங்கவிடப்பட்டிருந் தன. சில பதக்கங்களுமிருந்தன. அவள் இடையிலுள்ள பட்டுக் கச்சுப்பட்டையில் ஒருவித ஆயுதம் தொங்கவிடப் பட்டிருந்தது. அதைத் தற்காப்பிற்காக வைத்துக்கொள் ளும் ஒருவிதக் குத்தீட்டி அல்லது கத்தியாகவும் வைத்துக் கொள்ளலாம்; அல்லது அக்காலத்தில் அந்த நாட்டில் சாதாரணமாய் குருமார்கள் அல்லது மந்திரவாதிகள் வைத்துக்கொண்டிருந்த ஒரு ஆயுதமாகவேனும் எண்ணிக் கொள்ளலாம். அவள் கரத்தில் ஒரு கோலிருந்தது. அது நாற்புறங்களிலும் சதுரமான பட்டைகளையுடையது. அதின் பக்கங்களில் பலவித அக்ஷரங்களும் செதுக்கப்பட் டிருந்தன. அதில் நவக்கிரகங்களின் சஞ்சாரத்தை எக் காலத்தும் காட்டக்கூடிய ஒருவித பஞ்சாங்கமேயிருந்தது. அக்காலத்தில் அத்தீவுகளில் பலர் அத்தகைய பஞ்சாங் கத்தை வைத்துக்கொண் டிருந்தார்கள். ஆனால் இம் மூதாட்டியிடமிருந்தது பஞ்சாங்கமட்டுமல்ல, ஒரு மாத்

திரைக்கோல் என்று யாவரும் கருதக்கூடிய ஒரு கோலு மிருந்தது.

அக்காலத்தில் அத்தேசங்களில் இத்தகைய மந்திர வாதிகளெல்லாம் இம்சிக்கப்பட்டு வந்தார்கள். பூர்வீக ஆசாரமே நடைபெற்று வந்த இடங்களில் இவர்களிடம் ஜனங்களுக்கு பீதியும் மரியாதையும் உண்டு. வரவரப் புது நாகரீகம் ஏற்பட்டு மனிதற்கு இத்தகைய விஷயங் களில் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்ட விடங்களில் ஜனங் களுக்கு இவர்களிடம் அச்சமிருந்தாலும் வெறுப்புண்டா யிற்று. இன்னும் நாகரீக முதிர்ச்சியாலும் சடசாத்திரப் பயிற்சியாலும் புராதன விஷயங்களில் பூரண அவநம்பிக் கையுண்டான விடங்களில் இத்தகையோர் பேய் வயப்பட் டவர்களென்றும் ஜனங்களை மோசம் செய்வோரென்றும் தீர்மானிக்கப்பட்டுச் சட்டப்படி இம்சிக்கப்பட்டுத் தீயி லும் கொளுத்தப்பட்டார்கள்.

சத்த தீவு நாம் கூறிய மேல்கண்ட மூன்று நிலைமை களில் நடு நிலைமையிலிருந்தது. நாகம்மாள் பூர்வகாலத்தி லிருந்து சகுனம், எதிர்கால விஷயங்கள் முதலியவற்றைக் கூறுதல், எந்திரங்கட்டி பேய், நோய், துரதிஷ்டம் முதலிய வற்றை நீக்குதல் முதலிய வித்தைகளைக் கற்ற கௌரவ மான குடியிற் பிறந்தவள். அவளுடைய மந்திர வல்ல மைக்குப் பஞ்சபூதங்களும் அடங்கி நடக்கும் என்று அத் தீவில் பெரும்பாலார் நம்பியிருக்கிறார்கள். அவள் கோபம் கொண்டால் நடுக்கடலில் செல்லும் கப்பலும் திடீலென்று புயற்காற்றுண்டாகி யழிந்துவிடும். அவள் சபித்தால் உடனே பயங்கரமான இடி மின்னலோடுகூடிய கடுமழை யுண்டாகி ஊரை யழித்துவிடும் என்ற பீதி பெரும் பாலார்க்குமுண்டு. அவளும் எவ்விதமான சாமர்த்தியத் தாலோ தான் கூறும் எதிர்கால சம்பவங்கள் நிகழும்படி

யாகவும், தன் வாக்கு-நல்லதோ கெட்டதோ-சொன்னபடி நடக்கும் மாதிரியாகவும் தன் விஷயங்களை நடத்திக்கொண்டிருக்கிறாள். அவளுடைய பாஷையும், வார்த்தைகளின் அமைப்பும் மனிதர்களுக்கு அச்சத்தை யுண்டாக்கக்கூடியவைகளே.

* * * * *

நாகம்மாள் அங்கு வருவதற்கு முன்தான் புயற்காற்று சற்று தணிந்தது. ஆனால் அவள் தற்செயலாய் எல்லப்பன் வீட்டில் கூடியிருந்த ஆட்களிடம் வந்து சேர்ந்ததே புயற்காற்றும் மழையும் மறுபடி மும்முரமாகத் தொடங்கியது. காற்றும் மழையும் அடித்த மாதிரியால் அந்த வீடு எச்சமயத்தில் இடிந்து விழுந்து விடுமோ வென்று வீட்டிலுள்ளவர்கள் திகிலடைந்து விட்டார்கள்.

பாப்பம்மாளும் மிக்க திகிலடைந்து "அய்யோ! தெய்வமே நம்மைக் காப்பாற்றவேண்டும். இது உலகம் அழியவேண்டிய கடைசி நாளென்றே நம்பகமாய்க் கூறுவேன்" என்று பிரலாபித்துத் தன் தமையனை நோக்கி,

"ஓ! இது எத்தகைய நாடோடிகளும், பாமரர்களும் நிறைந்த நாடோ எனக்குத் தெரியவில்லை. நல்ல செழிப்பாகவும் நிம்மதியாகவு மிருந்த விடத்தை விட்டுவிட்டு, யாசகர்களும், நாடோடி அரட்டல்களும் சதா ஜனங்களை வலிய வந்து தொந்திரவு செய்யும் இந்த விடத்திற்கு வந்து சேர்ந்தாயே, உன் மூடத்தனம் எப்படிப்பட்டதோ எனக்கு விளங்கவில்லை. இவ்விடம் ஒருவர் தம் வீட்டில் சற்றேனும் நிம்மதியோடு காலத்தைக் கழிக்க முடியாத விடமா யிருக்கிறது" என்றாள்.

தன் தங்கையின் கடூரமான மொழிகளைக் கேட்ட எல்லப்பன் மனவருத்தமடைந்து, "தங்காய்! எல்லா விஷயங்களையும் சீர்திருத்திக்கொள்ளலாம். ஆனால், இக்

கொடூரமான புயற்காற்றிற்கு உதவி செய்வது போன்ற குணமுடைய ஒரு முரட்டுப்புத்தியும் குணமுமுடைய மாதைச் சீர்திருத்துவதுதான் ஆகாத காரியம்" என்றான்.

இதுகாறும் வீட்டு வேலைக்காரியும், அங்கு வந்திருந்த ஹாக்கரும் பாப்பம்மாளுடைய வார்த்தைகளால் நாகம்மாளுக்குக் கோபமுண்டாகாத விதமாய் நன்மொழிகளால் அவளை வேண்டிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் அந் நாட்டு வடமொழியில் அவளோடு பேசியபடியால் எல்லப்பனுக்கும் பாப்பம்மாளுக்கும் அவர்கள் சம்பாஷணையில் ஒரு வார்த்தையேனும் விளங்கவில்லை.

நாகம்மாள் கடுகடுப்பான முகத்தோடு, கண்களில் கோபத்தணல் வீச அவர்களை நோக்கி "இவர்கள் உபசாரம் எனக்கு அவசியமில்லை. இவர்கள் எவ்வளவு வரையில் இச்சத்தத் தீவின் சதாசாரங்களை யெல்லாம் அழிக்கிறார்களோ பார்ப்போம். இந்த உலோபிகளின் குணத்திற்கு முடிவு வரும். இப்படிப்பட்ட வீடு இப்புயற்காற்றில் இன் றிரவே யழிந்து பொடிப் பொடியாய்ப் போனாலென்ன நஷ்டம்? இத்தகைய லோபிகளும் இவ்வீட்டோடு மண்ணாய் மண்ணில் மறைந்துபோவதால் இத்தீவிற்கு என்ன நஷ்ட முண்டாகிவிடப் போகிறது. உயிர் பெற்றிருக்க வேண்டிய நீங்கள் இந்த அழியும் வீட்டைவிட்டு என்னுடன் வந்து விடுங்கள்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே ஹாக்கர் தட்டென் றெழுந்து தன்மேல் அங்கியை மாட்டிக்கொண்டு பிரயாணப் பையை யெடுத்துத் தோள்மேல் மாட்டிக்கொண்டு வெளிச் செல்ல ஆயத்தமாய் விட்டான். வேலைக்காரியும் தன் துணிகளை யுடனே சுருட்டிக்கொண்டாள்.

இவர்கள் செய்கைகளைக் கண்டதே வீட்டு முதலாளியாகிய எல்லப்பன் மனக்கலக்கமடைந்து முருகப்பனை

நோக்கி, "வாலிபனே! இக்காற்று மழையால் இவ்வீட்டிற்கு ஏதேனும் ஆபத்து நேரும் என்று நீ கருதுகிறுயா? இது ஒரு மிக்க புராதன வீடு" என்று மிக்க தடுமாற்றத்தோடு கேட்டான்.

வாலிபன்:—"அதைப் பற்றிக் கூற என்னுல் முடியாது. இத்தகைய பயங்கரமான புயற் காற்றை நான் இது காறும் கண்டதேயில்லை. இது எப்போது தணியும் என்பதைப் பற்றி மற்ற எல்லாரைவிடவும் இந்த நாகம்மாளே கூறக் கூடியவள். ஏனெனில் இவ்விஷயங்களைப் பற்றி இவளைப்போல் கூறக் கூடியவர்கள் இத்தீவில் வேறு யாருமேயில்லை யென்று நான் திட்டமாகக் கூறுவேன்" என்றுன்.

அவன் மொழிகளைக் கேட்ட அம்மூதாட்டி "ஓகோ! நாகம்மாள் விஷயங்களைப் பற்றி நீ யறிந்து கொண்டது இவ்வளவுதானே? அவளுடைய வல்லமைகள் இவ்வளவு சிறிய எல்லைக்குள் கட்டுப்படுத்தக் கூடியவைகளல்ல என்று நீ யறியவேண்டும். அன்னிய நாட்டானுயிருந்தாலும் நல்ல உள்ள முடைய வாலிபனே! இந்த அழியும் வீட்டை விட்டு வெளிப்பட ஆயத்தமாக விருப்பவர்களோடு கூட வெளியேறப் போகிறுயா என்ன?" என்றுள்.

வாலி:—"அம்மையாரே! அப்படிச் செய்ய எனக்குப் பிரியமில்லை. நான் செய்யவுமாகாது. நீ என்ன நோக்கங் கொண்டு இப்படி என்னைச் செய்யச் சொல்கிறுயோ அது எனக்குத் தெரியவில்லை. ஆயினும் இத்தகைய பயமுறுத்தலுக் கஞ்சி இப்பயங்கரமான புயற்காற்றில் என்னை வரவேற்ற வீட்டைவிட்டு நான் வெளிப்படமாட்டேன். கடவுள் எப்படி விட்டாலும் விடட்டும். இவர்கள் அதிதிகளுக்கும் வழிப்போக்கர்க்கும் கருணை காட்டி உதவிசெய்து ஆதரிக்காதவர்களாகவே

யிருப்பின், அத்தகையோர் எனக்கு மட்டும் இடங் கொடுத்து உதவியதற்காக நான் இன்னும் அதிக நன்றி யுடையவனுக வல்லவோ விருக்கவேண்டும்'' என்ருன்.

பாப்பம்மாள் அவன் மொழிகளைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து "பேஷ்! நல்ல தைரியசாலியான வாலிபன். இத்தகைய ஆளுக்காக ஒரு வாத்தல்ல, இங்கிருக்கும் எல்லா வாத்துகளையும் சமைக்கத் துணியலாம். இவன் சாதாரணமானவனல்ல. நல்ல உயர்குடியிற் பிறந்த சுத்தவீரனே எனத் தகும்'' என்ருள்.

நாகம்மாள் கூறிய மொழிகளும், ஹாக்கரின் நடக்கையும், வேலைக்காரியின் நடக்கையும் அவளுக்கு மிக்க கோபமூட்டிவிட்டன. ஆகிலும் முருகப்பன் மொழிகளால் சந்தோஷமும் உற்சாகமு முண்டாயின.

186574

9-வது அத்தியாயம்.

நாகம்மாள் முருகப்பனை உற்று நோக்கி, "வாலிபனுகிய முருகப்பனே! நான் கூறுவதைக் கவனமாகக் கேள். நீ யிவ்வுலகில் ஒரு வழியில் பெரிய காரியங்களைச் செய்யவும் பிரசித்திபெறவும் பிறந்திருக்கிருய். உன் எதிர்கால விவகாரங்கள் அபூர்வமானவை. உனக்கும் மங்கியழியவேண்டிய இங்குள்ள மனிதர்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. நீ இங்கிருந்து இவர்களோடு அழியலாகாது. இங்குள்ளவர்களின் வாழ்நாட்கள் தரையில் இந்த விநாடி முளைத்து மறு விநாடி கால்களால் மிதிக்கப்பட்டழியும் அற்பமான புற்களைப் போன்றவை. உன் பெயர் பிரசித்திக்கு வரவேண்டிய அமைப்புடையது. தெரிகிறதா?" என்று உறுதியான மொழிகளாகக் கூறினுள்.

சென்னை-600 008
186574

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 1—12—0. தனித்தனி வாங்குபவருக்கு ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 1.

அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலை பெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the " Ananda Bodhini " Press, Madras.